விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினாறு


சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 22 வெள்ளிக்கிழமை (04.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 47

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்

# அடுத்தவாரம் ஜனாதிபதி அங்கு விஜயம்!

## சி-130-கே ரக விமானங்களை அனுப்புக அமெரிக்காவைக் கோருகிறது இலங்கை



(கொழும்பு)

சி-130-கே ரக விமானங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்கம் அமெரிக்காவை கோரியுள்ளது.

2004 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் செய்துகொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு அமைவாக மேற்படி சி-130-கே ரக விமானங்களை உடன் அனுப்பி வைக்குமாறு அரசாங்கம் கோரியுள்ளது.

அதேவேளை உதிரிப்பாகங்கள் இல்லாத நிலையில் சி-130-கே ரக விமானங்கள் இரண்டு விமானப்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு விமானங்களையும் பயன்படுத்தும் பொருட்டு (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுத தளபாட கொள்வனவுக்கு முஸ்தீபு

(கொழும்பு)

பாதுகாப்பு உடன்பாடு குறித்துப் பேச்சு நடத்துவதற்கென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 7 ஆம் திகதி பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளார். சுமார் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்குச் செல்லும் ஜனாதிபதி அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து இராஜதந்திரப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமிக்குப் பின் தமிழ் மக்களின் உரிமையில் சர்வதேசம் கூடிய கவனம்

### இடதுசாரி முன்னணித் தலைவர்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டில் சிறுபான்மையினரின் உரிமையைப் பாதுகாப்பதில் சர்வதேச சமூகத்தின் தலையீடு அதிகமாக தென்படுவதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அனர்த்தம் இடம்பெற்ற பின்னர் நாட்டு மக்கள் மத்தியிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் இனவாதம் நீங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தின் பின்னர் இனவாதக் கொள்கை பலவீனமடைந்துள்ளதுடன் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அழுத்தங்கள் எழுந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-09)

## கூட்டமைப்பு எம்.பிகளுடன் நெதர்லாந்து அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் பேனார்ட்பெற் நேற்று தமிழ்த் தேசியக கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை கொழும்பில் கில்டன் ஹோட்டலில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையில் சுனாமியின் தாக்கத்தி

## கட்சிகளின் ஒத்துழைப்பை பெற அரசு தவறிவிட்டது: ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

கையில் பாராளுமன்றத்தை மையப்படுத்தி

நாம் பெறுக்கொள்ள முடியும்.

கொழும்பில் கில்டன் ஹோட்டலில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையில் சுனாமியின் தாக்கத்தினால் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்தும் அதற்கான வெளிநாட்டு உதவிகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் கூட்டமைப்பினரின் சார்பில் ஆர்.சம்பந்தன், ஜோசப் பரராசசிங்கம் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.(ச)

(கொழும்பு)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் போது அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பு பெற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் தவறிவிட்டதாக ஐக்கியதேசியக் கட்சிபாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரீஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஜீ.எல்.பீரீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் பாராளுமன்றத்தை மையப்படுத்தி ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு செயல்படுத்துவதன்மூலம் பெருமளவு நன்மைகளினை நாம் பெறறுக்கொள்ள முடியும்.

இவ்வாறான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஏனைய அரசியல்கட்சிகளினையும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அகவை குறைந்த சிறுவர்கள் 23 பேர் மனிதவுரிமைகள் செயலகத்தில் ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பில் சுயவிருப்பின் பேரில் இணைந்து கொண்ட 18 வயதிற்குட்பட்ட 23 சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றனர்.

மேறபடி 23 சிறுவர்களில் 4 சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று மாலை 4 மணியளவில் வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் நிறுவனம், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் விடுதலைப் புலிகளின் இணைப்பாளர் தியாகராசாவினால்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கரி நாள்

இலங்கையின் 57வது சுதந்திர தினத்தை யாழ்.மாவட்டத்தில் கறுப்பு நாளாக அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வீதிகள், கடைகள், அலுவலகங்கள் மற்றும், வீடுகளில் கறுப்புக்கொடிகளை பறக்க விடுமாறும் அனைவரும் கறுப்புபட்டிகளை அணிந்துகொண்டு கடைமையில் ஈடுபடுமாறும் கேட்கப்பட்டுள்ளது. அனைத்து செயற்பாடுகளும் வழமை போல்நடைபெறும் அதேவேளை இன்று அனைவரும் கறுப்புநாளாக அனுஷ்டிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்கங், கூட்டுஸ்தாபனங்கள் என்பவற்றிலும் கறுப்புக்கொடிகளைப் பறக்க விடுமாறும் பொது அமைப்புககளின் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேவேளை 57வது சுதந்திரதின வைபவம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் சுதந்திர சதுக்கத்தில் இன்று நடைபெறவுள்ளது.

முப்படையினரால் வழங்கப்படும் அணிவகுப்பு மரியாதை அங்கு நடைபெறும் இதற்கான ஒத்திகை பொலிஸ்மா அதிபரின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதேவேளை சுதந்திரதினக் கொண்டாட்டத்தை மிகவும் எளிமையான முறையில் மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச;8)

## அரச அலுவலகங்களை விடுமுறை நாள்களில் திறக்கப் பணிப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு பொது விடுமுறை நாட்களிலும் வாரஇறுதி நாட்களிலும் சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலகங்கள் திறந்துவைக்கப்பட வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பணித்துள்ளார்.

இதன்படி பாதிக்கப்பட்ட இடங்களில் சகல உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பிரதேச செயலகப் பிரிவுகள், கிராமசேவகர் பிரிவுகள், மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் ஆகியவற்றின் அலுவலகங்கள் இந்நாட்களில் (14 ஆம் பக்கம் பார்க்க)

# முதியோர்களை மதிக்கும் மனநிலை மக்களிடையே குறைந்து செல்கிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கவலை

(சாவகச்சேரி)

மக்களுக்கு பல சேவைகளை அரச சேவையில் இருந்து செய்த ஓய்வூதியர்களுக்கும் பல கஷ்டங்கள் உள்ளது. என்பதை நாம் அறிவோம் அவர்களது சேவையை மதித்து கௌரவித்து செயற்படவேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச்சங்கத்தின் 14 ஆவது பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொணடு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

முதியவர்களை மதிக்கும் தனமை தற்போது குறைந்து செல்கிறது. தமது சேவைக் காலத்தில் எமக்குச் சேவை செய்த ஓய்வூதியர்களை நாமும் மதித்துக கௌரவிக்கப்பழக வேண்டும்.

முதியவர்களை மதிக்கும் தன்மை தற்போது குறைந்து செல்கிறது தமது சேவைக்காலத்தில் எமக்குச் சேவை செய்த ஓய்வு,தியர்களை நாமும் மதித்துக் கௌரவிக்கப் பழகவேண்டும்.

நாம் இவர்களது சேவைக்கு கடமைப்பட்டவர்கள். மக்கள் பிரதிநிதியாகிய நான் தங்கள் தேவைகளை நிறைவேற்றத் தயாராக உள்ளேன்.

உங்கள் சங்கத்தேவைகளை தெரியப்படுத்தி உதவிகளைப் பெறலாம். நீங்கள உங்கள் ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வகையில் நீங்களும் சந்தோசமாக மற்றவர்களையும் சந்தோசப்படுத்தும வகையில் சுற்றுலாக்கள் செய்து அன்புக்காக ஏங்கும் ஆதரவற்ற சிறுவர்களுடன் அளவளாவி ஆற்றுகைப படுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

முற்பகல் 10.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் மண்டபத்தில் நா.தண்டபாணி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் மற்றும் யாழ்.மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

ஓய்வூதிய அதிகரிப்பு தற்போதைய பொருடகளின் விலை அதிகரிப்புக்கேற்ப அதிகரிக்கப்படவில்லை. பிரதேச செயலர்கள அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை சிறந்த முறையில் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்குவதைப் பாராட்டவேண்டும் என்று சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.(ப-29)

# அம்மன் சிலையில் இருக்கும் நாகபாம்பு மாணவியின் கையில் உயிருடன் தவழ்ந்தது

## பண்டத்தரிப்பில் அதிசய நிகழ்வு

(பண்டத்தரிப்பு)

'பாம்பைக் கணடால் படையும் நடுங்கும்' என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் அம்மனிலிருந்த நாகபாம்பு உயர் பெறறு மாணவி ஒருவரின் கையில் நின்று காட்சி கொடுத்தது. அனைவரையும் வியக்க வைக்கும் ஒரு செய்தியாகும்.

பண்டத்தரிப்பில் கேணிக்கட்டுவீதியில் ஒரு அம்மன் ஆலயம் காணப்படுகின்றது. அங்கு நித்திய பூஜை நடைபெறுவதில்லை. ஆனால் விசேட நாட்களில் மட்டும் சகோதரனான பெரியவிளான் விக்னேஸ்வரர் ஆலயப் பூசகர் தர்மதர்ஷசர்மாவினால் அபிஷேக ஆராதனைகள் நிகழும்.

ஆனால் ஒவ்வொரு நாளும் அந்தண குலத்தில் பிறந்தவரும், யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவியுமான செ.ஜீவிதா அம்பிகைக்கு விளக்கு ஏற்றிப் பூஜை செய்வார்.

ஒரு நாள் வழக்கம்போல் தீபம் ஏற்றும் போது அம்பிகையிலிருந்த பாம்பு ஜீவிதாவின் கையிலிருந்து காட்சி கொடுத்தது. அதன் பின்பு அப் பாம்பு இறங்கி அம்மனின் முடியிலிருந்து காட்சி கொடுத்தது. அது வரையும அம்மாணவி எதுவும் செய்யாது அம்மன் அருகே நின்று தியானித்தாள்.

அவ்வளவு நேரமும் அன்னை பாராசக்தி அருள் கிடைத்தது. அம்மன் அவள் உள்ளத்தில் உறைந்துள்ளார் என்பதையும் உரை முடிகின்றது. இப்பாக்கியம் ஒரு சில குருக்களுக்கே கிடைத்தது அரிது. இம்மாணவிக்குக் கிடைத்ததை யிட்டு அந்தண சமூகமே பெருமைப்படுகிறது.

(ப)

## இராசி பலன்

04.02.2005 (தை 22, வெள்ளிக்கிழமை)
தசமி - பிற்பகல் 04.27 மணிவரை
அனுசம் - முற்பகல் 07.44 மணிவரை
கேட்டை முற்பகல் 7.45 தொடக்கம்
இராகுகாலம் 11.05 - 12.35 மணிவரை
சுபநேரம் 06.35 -08.05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அஜீரணக் கோளாறு, மனக்கவலை, அபகீர்த்தி, காரிய தாமதம். |
| இடபம் | எதிர்பாராத நன்மை, மனோ தைரியம், அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம். |
| மிதுனம் | நண்பர்கள் உதவி, தொழில் நன்மை, தெய்வ சிந்தை, காரிய அனுகூலம். |
| கடகம் | வியாபார நன்மை, குடும்பக் கவலை, காரிய இடையூறு, பணக்குறைவு. |
| சிம்மம் | புத்தி சஞ்சலம், எடுத்த கருமங்கள் கைகூடும், ஆரோக்கியக் குறைவு, வாக்கு மேன்மை. |
| கன்னி | மாதர் நட்பு, இஷ்ட சித்தி, பிரயாண நன்மை, உறவினர் உதவி. |
| துலாம் | கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், |

# வீதி சேதம் மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதியின் பரமேஸ்வரா சந்திக்கும் தபால பெட்டிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி பல்த்த சேதமடைந்து காணப்படுகிறது.

இதனால் அவ் வதியால் செல்லும் வாகனங்கள், பொதுமக்கள் பல இன்னல்களை அடைய வேண்டியுள்ளது.

அத்துடன் விபத்துக்களும் ஏற்படுகிறது,

திருத்த வேலைகளிற்கான கற்கள் பறிக்கப்பட்டுள்ள போதும் அது இன்னமும

# குழந்தையை அடையாளம் காண மரபணுப் பரிசோதனைக்கு உத்தரவு

ஆழிப்பேரலையின் போது அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டு தற்போது கல்முனை ஆதார வைத்தியசாலையின் பராமரிப்பிலுள்ள 4 மாத ஆண குழந்தைக்கு உரிமை கோரும் பெற்றோரை அடையாளம் காண்பதற்கு மரபணுப பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கல்முனை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 26ம் திகதி மாலை கல்முனைப் பகுதியில் அநாதரவான நிலையில் எஸ்.சிறீஸ்கந்தராஜா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எஸ்.அழகையா என்பவர் ஊடாக இந்தக் குழந்தை கல்முனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இந்தக் குழந்தைக்கு பல பெற்றோர்களிடம் ஒப்படைக்குமாறு வாதிட்டனர்.

மகப்பேற்று வைத்திய நிபுணர் எம். முகுந்தன் தமது சட்டத்தரணி ஊடாக சமர்ப்பித்த வாதத்தில் தற்போது ஆழிப்பேரலையினால் பல பெற்றோர்கள் தமது குழந்தைகளை இழந்துள்ளனர். எதிர காலததில் மேலும் சிலர் இக் குழநதைக்கு சட்ட ரீதியாக உரிமை கோர இடமுண்டு. இந்நிலையில் உரிமை கோருபவர்களையும் குழந்தையையும் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலமே பெற்றோரை அடையாளம் காண முடியும் என்றார்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி குழந்தையையும் அதற்கு உரிமை கோரும பெற்றோரையும் மரபணு பரிசோதனைக்கு உத்தரவிட்டார். எதிர்காலத்தில் யாராவது

**கன்னி** மாதர் நட்பு, இஷ்ட சித்தி, பிரயாண நன்மை, உறவினர் உதவி.

**துலாம்** கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், பிரயாணம், ரோக நிலை.

**விருச்சிகம்** தெய்வ சிந்தை, வெகுமானம், மனமகிழ்ச்சி, தொழில் நன்மை.

**தனுசு** சோம்பல், பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், பண விரயம்.

**மகரம்** தெய்வ தரிசனம், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, திடீர் நன்மை.

**கும்பம்** நல்ல மரியாதை, ஆரோக்கியம், காரியம் கைகூடும், பிரபுத்தனம்.

**மீனம்** உத்தியோக பங்கம், தேசாந்திர வாசம், களஸ்திர நன்மை, கட்டுப்பாடு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
– வளவன்


நிறைஞ்சனாஸ்
(சாங்கானை)
பிரசாந், சினேகா, வடிவேல், ஜனகராஜ்
மஞ்சுளி நடித்த






கா.நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)


னங்கள், பொதுமக்கள் பல இன்னல்களை அடைய வேண்டியுள்ளது.

அத்துடன் விபத்துக்களும் ஏற்படுகிறது, திருத்த வேலைகளிற்கான கற்கள் பறிக்கப்பட்டுள்ள போதும் அது இன்னமும திருத்தப்படாதுள்ளமையினால் மக்கள் பெரிதும விசனமடைந்துள்ளனர். (ப-47)


# சிறுவிளம்பரம்

## தேவை

பெண்களுக்கான உள்ளாடை தைப்பதற்குத் தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவைப்படுகின்றனர் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தையல் பழகவிரும்புகிறவர்களும் நேரில் சமுகமளிக்கலாம்.

நேரம்
காலை 10.00-12.00 வரை
மாலை 05.00 - 6.00 வரை

தொடர்புகளுக்கு திரு. ச. பரராஜசிங்கம் ஸ்டேசன் றோட், கோண்டாவில்.

(C/1070)

நாதன்ஸ்
யாழ்ப்பாணம் (குளிரூட்டியது)
சத்தியராஜ், மும்தாஜ், மற்றும் பலர்
நடித்த
மகாநடிகன்
தினசரி 4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


என்பவர் ஊடாக இந்தக் குழந்தை கல்முனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இந்தக் குழந்தைக்கு பல பெற்றோர்கள் தமது குழந்தை என வைத்தியசாலை நிர்வாகத்திடம் உரிமை கோரியிருந்தனர். இருப்பினும் கல்முனையைச் சேர்ந்த ஜெயராஜா - ஜுனித்தா தம்பதிகள் இந்தக் குழந்தை தங்களுடைய குழந்தை அபிலாஸ் எனக் கூறி கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.

கடந்த 12ஆம் திகதி இந்த மனு மீதான விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்றபோது குறிப்பிட்ட தம்பதிகளிடம் பராமரிப்பிற்காக குழந்தையை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்தது. வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் கே.முருகானந்தம் மகப்பேற்று வைத்திய நிபுணர் எம்.முகுந்தன் ஆகியோர் நீதிபதியைச் சந்தித்து குழந்தையின் உடல் ஆரோக்கியம் கருதி தொடர்ந்து வைத்தியசாலைப் பராமரிப்பில் வைப்பதற்கு அனுமதி கேட்டனர்.

இதனையடுத்து, குழந்தை தொடர்ந்தும் வைத்தியசாலைப் பராமரிப்பில் இருந்து வருகிறது. கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.பி.முகைதீன் முன்னிலையில் நேற்று முன்தினம் மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பெற்றோர் எனக் கூறும் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குழந்தைக்கு பல பெற்றோர் உரிமை கோரியிருந்தாலும் சட்டரீதியாக குறிப்பிட்ட தம்பதிகளே உரிமை கோரியிருப்பதால் குழந்தையை அவர் என்றார்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி குழந்தையையும் அதற்கு உரிமை கோரும பெற்றோரையும் மரபணு பரிசோதனைக்கு உத்தரவிட்டார். எதிர்காலத்தில் யாராவது உரிமை கோரினால் அவர்களையும் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அதுவரை குழந்தை வைத்தியசாலை பராமரிப்பில் இருக்க வேண்டும். உரிமை கோரும் பெற்றோர் வைத்தியசாலை சட்ட திட்டத்திற்கு அமைய பார்வையிட முடியும் என்று தனது உத்தரவில் குறிப்பிட்டு விசாரணையை எதிர் வரும ஏப்ரல் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இதற்கிடையில் குழந்தை தொடர்ந்தும் வைத்தியசாலைப் பராமரிப்பில் இருக்கவேண்டும் என நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட உத்தரவையடுத்து, ஆத்திரமடைந்த உரிமை கோரும் தம்பதிகளும் அவர்களது உறவினர்களும் நீதிமன்றத்திற்கு வெளியே வைத்தியசாலை நிர்வாகத்திற்கு எதிரான கோசங்களை எழுப்பினார்கள்.

அங்கிருந்து நேரடியாக வைத்திசாலைக்குள் அத்துமீறி நுழைந்து குழந்தையை எடுத்துச் செல்ல முற்பட்டனர். இதனால் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் அவர்களுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக வைத்தியசாலை அலுவல்கள் ஓரிரு மணித்தியாலங்கள் வரை பாதிக்கப்பட்டன.

இதனையடுத்து, பொலிஸார் அங்கு வரவழைக்கப்பட்டு அனைவரும் வெளியேறப் பட்டனர். இவர்கள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கும், வைத்தியசாலை ஊழியர்கள் மீது தகாத வார்த்தைப் பிரயோகம் செய்தமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட போதிலும் பின்பு நிலைமை சுமுக நிலைக்குத் திரும்பியது. (ரு)

# இன்று ஒரு தகவல்

## அறிமடம் சான்றோர்க்கு அணி

"அறிந்தும் அறியாமல் இரு" என்று பெரியவர்கள் சொல்வார்கள் அது ஒரு பெரிய பண்பு. சான்றோர்கள் எல்லோரும் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். "பழமொழி நானூறு" என்ற ஒரு சங்க இலக்கியத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. அதாவது அறிமடம் சான்றோர்க்கு அணி" என்று அறிந்தும் அறியாதது போல நடந்துகொள்வது ஞானிகளின் சிறப்பு என்பது இதன் அர்த்தம்.

பக்தி அதிகமாகி விடுவதனால் சிலர் பைத்தியம் போல் நடந்துகொள்வார்கள். அதை நாம் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. ஒரு முல்லைக் கொடிவளர வேண்டும் என்பதற்காக தனது தங்கத் தேரை நிறுத்தி வைத்தாரே பாரி. அவரைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? ஒரு மயில் குளிரினால் அவதிப்படுகிறது என்பதற்காக தனது பீதாம்பரத்தைப் போர்த்தினாரே பேகன்! அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

வரகுணபாண்டியன் பற்றி அறிந்திருப்பீர்கள். அவர் கூட பக்தி அதிகமானதால் ஒருமுறை கொஞ்சம் வித்தியாசமாக நடந்திருக்கிறார். திருவிடைமருதூர் இருக்கிறதல்லவா? அங்கே ஒரு இடத்தில் எள் காய வைத்திருந்தார்களாம் எதற்காக தெரியுமா? கோயிலுக்கு எண்ணெய் தயாரிப்பதற்காக!

அந்த நேரம் பார்த்து அந்தப் பக்கமாக ஒருவர் வந்தார். எள் காயம் போட்டிருந்ததைப் பார்த்தார். என்னவோ நினைத்தார். அந்த எள்ளில் ஒரு பிடி எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். சுவாமிக்கு உபயோகப்படுவதற்காக காய வைத்திருக்க எள்ளை இப்படி அள்ளி வாயில் போடலாமா? அது பெரிய தவறு அல்லவா? சிவ அபராதம்.

அங்கே காவலில் இருந்தவர்களும் இதைப்பார்த்து விட்டார்கள். "ஐயையோ! அபசாரம்! அபசாரம்" என்று கத்திக் கொண்டே ஓடிவந்து இவரைப் பிடித்துக் கொண்டார்கள். நேராகக் கொண்டு போய் வரகுணபாண்டியன் முன்பு நிறுத்திவிட்டார்கள். வரகுணபாண்டியன் நிமிர்ந்து பார்த்தார். பார்த்தால் அவருக்கு மிகவும் ஆச்சரியமாகி விட்டது. ஏனென்றால் எள்ளை அள்ளி வாயில் போட்டுக் கொண்டாரே அவர் எப்படி இருந்தார் தெரியுமா? நெற்றியில் திருநீறு! உடலெல்லாம் பக்திமயம் இப்படிப்பட்ட சிவபக்தர் அந்த சிவ அபராதத்தை எப்படிச் செய்வார்? ராஜாவால் இதை நம்ப முடியவில்லை. அதனால் மிகவும் அன்பாகவே அந்த ஆளைப்பார்த்து "தாங்கள் ஏன் இப்படி ஒரு காரியத்தைச் செய்தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த சிவபக்தர் சொன்னார் "நான் பசியின் காரணமாக அந்தக் காரியத்தைச் செய்யவில்லை.இந்த ஊர் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. சிவ அபராதம் செய்துவிட்டால் ஏழு ஜென்மத்திற்கும் இந்தக் கோயிலுக்கு செக்கு இழுக்கின்ற மாடாக பிறப்பேன் என்பது எனக்குத் தெரியும்.அதற்காகத்தான் இப்படிச்செய்தேன்" என்றார். அந்த ஊரிலேயே பிறக்கவேண்டும் அதுவும் செக் இழுக்கும் மாடாகப் பிறக்க வேண்டும். அந்த ஆலயத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும். ஒரு தவறு செய்தால் தான் அது சாத்தியம் என்பதைப் புரிந்து கொண்டு அவர்- அப்படிச் செய்திருக்கிறார் எப்பேர்ப்பட்ட பக்தி!

வரகுணபாண்டியன் பார்த்தார் "எங்கே உங்கள் வாயைக் கொஞ்சம் திறவுங்கள்" என்றார். அவரும் வாயைத் திறந்தார். அங்கே கூடியிருந்தவர்கள் எல்லோரும் ராஜா அந்த ஆளின் வாயை கிழிக்கப்போகிறார் என்று நினைத்தார்கள். ஆனால் ராஜா என்னசெய்தார் தெரியுமா? அவரது வாயில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு எள்ளை எடுத்து தனது வாயில்போட்டார். அதன்பின் சொன்னார் "நீங்கள் செய்த அபராதத்தை நானும் செய்துவிட்டேன்! உங்களுடன் சேர்ந்து நானும் செக் கிழுப்பேன்" என்றார். இதுதான் சான்றோர்கள் இயல்பு.

இப்படி பக்தியினால் தவறு செய்பவர்கள் அந்தக் காலத்தில் அதிகம். புத்தியில்லாமல் தவறு செய்பவர்கள் தான் இந்தக் காலத்தில் அதிகம்.

ஒரு அரிசி ஆலையில் நெல் காயவைத்திருந்தார்கள். அதைத் திருடிவிட்டு ஒருவன் ஜெயிலுக்கு வந்தான். ஜெயில் அதிகாரிகளிடம் மிக நெருக்கமாகப் பழகிவிட்டான். தண்டனைக்காலம் முடிந்து வெளியே வந்தான். வெளியே வருவதற்கு முன் ஜெயில் அதிகாரி அவனைப் பார்த்து "வெளியே போய் என்ன செய்யப் போகிறாய்?" என்றார். "மறுபடியும் எங்காவது நெல் திருடலாம் என்று நினைக்கிறேன்" என்றான். "நீ இன்னும் திருந்தவில்லையா?" என்றார் அந்த அதிகாரி. "திருந்தி விட்டேன் சார். இருந்தாலும் எப்போதும் உங்களிடமே தொண்டு செய்ய வேண்டுமென்று ஒரு ஆசை! அதற்கு இதுதான் வழி " என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரச நிவாரணங்கள் பாதிக்கப்பட்டோரைச் சென்றடையாமைக்கு பிராந்திய நிலையங்களிலுள்ள குறைபாடுகளே காரணம்

## -அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜா

(கொழும்பு)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் எதிர்பார்த்ததைப் போன்று நிவாரணம் வழங்குவதற்கான செயற்திட்டம் உரியமுறையில் செயற்படுத்தப்படவில்லையென்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரும் சட்டம் சமாதானம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியாலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த மக்களில் 30 சதவீதத்தினருக்கு மாத்திரமே அத்தியாவசியப் பொருட்கள் கிடைத்துள்ளன.

ஏனையோருக்கு பொருட்கள் முழுமையாக சென்றடையவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கென உருவாக்கப்பட்ட பிராந்திய நிலையங்களில் காணப்படும் குறைபாடுகளே நிவாரணப்பொருட்கள் மக்களை உரிய முறையில் சென்றடையாததற்கான காரணமாகும்.

எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் பாதிக்கப்பட்ட 80சதவீதமான மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுனாமியினால் இறந்த ஒவ்வொருவரினதும் சார்பிலும் அவரவர் குடும்பங்களுக்கு 15ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கப்படும். இந்த இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள இறப்பு அத்தாட்சிப்பத்திரம் தேவையில்லை.

கிராமசேவையாளர், சமூகசேவை உத்தியோகத்தர், சமுர்த்தி முகவர் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோரில் இரண்டு பேரின் அத்தாட்சிப்பத்திரம் போதுமானது.

அத்துடன்,சமையல் உபகரணங்களைக்கொள்வனவு செய்ய 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படுவதுடன் 5 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவாக மக்கள் வங்கி,இலங்கை வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி என்பன ஊடாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (ந-8)

# சூழலை மாசுபடுத்துவோருக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் பௌசி எச்சரிக்கை

(கொழும்பு)

சூழலை மாசுபடுத்துவோர் எவராக இருந்தாலும் தகுதி தராதரம் பாராமல் அவர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென்று சூழல் மற்றும் இயற்கைவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

நுனுகம்பொர வனவிலங்கு பூங்காவை தேசிய வனவிலங்கு பூங்காவாக மாற்றும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சூழல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது அனைவரினதும் கடமையாகும். இதனைப் பாதுகாக்கும் பொருட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நுனுகம்பொர தேசிய வனவிலங்குப் பூங்கா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த தேசிய வனவிலங்குப் பூங்கா 23 ஆயிரத்து 400 ஹெக்ரேயர் பரப்பளவைக்கொண்டது. இங்கு 200ற்கும் அதிகமான யானைகள் வாழ்வதாக சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சு தெரிவித்துள்ளது.

அங்கு அமைச்சர் பௌசி மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் அழுத்தங்களினால் மேற்கொள்ளப்படும் இந்தச சூழல் மோசடிகளைத் தடுக்காமல் போனால் எங்களுக்கு இருக்கும் சொத்துக்கள், அதனால் கிடைக்கும் பயன்கள் இல்லாமல் போகும்.

அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியலுக்காக மட்டுமே பேசுகிறார்கள். ஆனால், அவ்வாறு பேசுவது குறித்து நான் பொருட்படுத்தமாட்டேன். நான் சுற்றாடலை நேசிப்பதினால் சூழல் மோசடிகள் செய்பவர்களுக்கு கொடுக்க வேண்டிய அதிகபட்ச தண்டனையைக் கொடுப்பேன் என்று குறிப்பிட்டார். (ந-8)

# பதவி வெற்றிடங்கள் நிலவுவதால் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பாதிப்பு

(கொழும்பு)

லஞ்ச ஊழல் குற்றத்தடுப்பு ஆணைக்குழுவுக்கு பிரதான மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்படாததினால் முறைப்பாட்டு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக லஞ்ச ஊழல் குற்றத்தடுப்பு ஆணைக்குழுவின் தலைவர் பியசேன றணசிங்க தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் 15ஆம் திகதி ஆணைக்குழுவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரதான மூன்று உறுப்பினர்கள் பதவிக்காலம் முடிவடைந்ததன் காரணமாக அந்த மூன்று உறுப்பினர்களுக்கான பதவி வெற்றிடம் ஏற்பட்டது.

புதிதாக எவரையும் அப்பதவிக்கு நியமிக்காததினால் புதிதாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் செய்ய முடியாமலிருப்பதுடன், விசாரணைகள் பூர்த்தியடையாமல் இருக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக வழக்கு பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

புதிதாக 200க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன்,முன்னர் விசாரணைகள் மேற்கொண்ட ஆயிரத்து 500 முறைப்பாடுகளின் விசாரணைகள் பூர்த்தியடைந்த நிலையிலிருக்கின்றன.

புதிதாக மூன்று உறுப்பினர்களின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டு ஜனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பு சபையினால் சிபார்சு செய்யப்பட்ட மூவரின் பெயர்கள் கிடைத்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

இதுகுறித்து ஜனாதிபதி ஆராய்ந்து வருவதாகவும் இன்னும் சில தினங்களில் இதுகுறித்து முடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-8)

# கட்டட நிர்மாண எல்லை விவகாரம்; மாத்தறை பிரதேச மக்கள் ஐ.நா. விடம் மகஜர் கையளிப்பு

(மாத்தறை)

சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்டு மாத்தறை கரையோரப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு கரையோரப்பகுதிகளில் 100 மீற்றருக்கு அண்மித்த பிரதேசத்தில் தங்கள் வீடுகளை அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்படாமை குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் இடம்பெயர்ந்த மக்களின் அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவொன்று இதுதொடர்பான மகஜரொன்றை கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளரிடம் கையளித்திருக்கின்றது.

கடிதத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி,பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன. (ந-8)

# உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளின் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

**புதிய கொடுப்பனவுகள் யூன் மாதம் தொடக்கம் வழங்கப்படும்**

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்ற மக்கள் பிரதிநிதிகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்திருப்பதாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. புதிய கொடுப்பனவு முறைக்கு ஏற்ப மாநாகரசபை முதல்வருக்கு மாதாந்தக் கொடுப்பனவு தொகையான 12 ஆயிரத்து 450 ரூபா 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. உதவி முதல்வர் ஒருவரின் கொடுப்பனவுத் தொகை 8 ஆயிரத்து 200 ரூபா 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது: சாதாரண உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு 7 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

பிரதேசசபைத் தலைவரின் அதிகரிப்புத் தொகை 10 ஆயிரம் ரூபாவாகவும் உதவித் தலைவருக்கான தொகை 6 ஆயிரத்து 500 ரூபாவாகவும் உறுப்பினருக்கான தொகை 5ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது. இவ்வாறு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் தொகை வரும் யூன் மாதம் முதல் வழங்கப்படும் எனவும் தெரியவருகிறது. (ப-8)

# யாழ்.செயலகம் முன்பாக போராட்டம்

(மருதங்கேணி)

தென்மராட்சியில் உள்ள ஒன்பது கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 10ஆம் திகதி யாழ். செயலகத்திற்கு முன்னால் போராட்டம் ஒன்றை நடததுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கி மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும். தடைசெயயப்பட்ட விவசாய நிலங்களை விவசாயிகளிடம் ஒப படைக்க வேண்டும். மீன் பிடிக்குத் தடை செய்யப்பட்ட பகுதிகளைத் தடையை நீக்கி மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும். தடை செயயப்பட்ட பாதைகளை மக்கள் பாவனைக்கு திறந்து விடுவதால வேண்டும். பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்களிலிருந்து படைகளை விலகக வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இப்போராட்டத்தை நடத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கைதடி, நாவற்குழி, வேம்பிராய், தச்சன்தோப்பு, வீரபத்திர கோவிலடி, நாவற்குழி தெறகு, சரஸ்வதி கிராமம், மறவன்புலோலி, நாவற்குழி வீட்டுத்திட்டம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே இப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். (ப-35)

# நாட்டை மீளக்கட்டியெழுப்பும் விவகாரத்தில்

# அரசு வெளிப்படையாக செயற்படவேண்டும்

## சர்வதேச நிதி வழங்கும் அமைப்புகள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களை செயற்திறன் வாய்ந்ததாக மாற்றுவதற்கு 150கோடி டொலர்கள் தேவையாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி ஆகியன கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த மதிப்பீடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியினால் இலங்கையில் ஏற்பட்ட இழப்பு 100கோடி டொலர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இழப்புத் தொகை மொத்த உளளூர் உறபத்தியில் 44 சதவீதத்துக்கு சமமானதாகும்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி ஆகியவற்றின் இலங்கைப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் சமாதான முயற்சிகளை வலுப்படுத்த சமூகங்களுக்கிடையிலான வேறுபாடுகளை களையவேண்டும்.

நாட்டை மீளக் கட்டியெழுப்பும்போது பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களையும் வெளிப்படையான முறையில் கண்காணித்து கணக்காய்வுக்கு உட்படுத்த சரியான முறை வகுக்கப்படவேண்டும். (ப-8)

# ஜே.வி.பியால் ஜனாதிபதிக்கு

# தொடர்ந்தும் தொந்தரவு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குரிய துறைமுகத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ள 27 கொள்கலன்களில் யுத்தத்தின் போது பயன்படுத்தும் உணவு வகைகள, சப்பாத்து வகைகள காணப்படுவதாக ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

இக் கொள்கலன்கள் சிலவறறில் போர்க்காலத்தில படையினர் உடனடியாக உட்கொள்ளக்கூடிய உணவுவகைகளும் படையினா பயன்படுத்தும் காலணிகளும் காணப்படுவதாக ஜே.வி.பி.மேலும் தெரிவித்துள்ளது.

இதுபற்றி ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ள ஜே.வி.பி. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உணவு வகைகள், சப்பாத்து வகைகள் எதற்கு என்றும் கேள்வி எழுப்பியுள்ளது. (க)

# விளக்கமறியல் உத்தரவு

கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற ஆர்ப்பாட்டச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 4 பேரில் இருவர் நிபந்தனையின் பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய இருவரும் எதிர்வரும் 9ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆழிப்பேரலையின் பின் மீட்கப்பட்ட குழந்தைக்கு உரிமை கோரும் தம்பதிகளான ஜெயராஜா, ஜூனித்தா ஆகியோரே நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இருவரும் நீதிமன்ற உத்தரவின் பேரில் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் என பொலிஸார் நீதிபதி கே.தடசணாமூர்த்தி முன்னிலையில் சமர்ப்பித்த அறிக்கையையடுத்தே இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.

குழந்தையை வைத்தியசாலைக்கு சென்று பார்ப்பது என்றால் இருவர் மட்டும் தான் செல்ல வேண்டும் என்றும் நீதிபதி இவர்களுக்கு எச்சரிக்கையுடன் உத்தரவிட்டார்.

வைத்திசாலையில் சட்டவிரோதமாகக் கூடியது. அத்துமீறி பிரவேசித்தது, தாதியர்களைத் தாக்கியது போன்ற குற்றச்சாட்டுக்கள் இந்த நால்வர் மீதும் பொலிஸாரால் சுமத்தப்பட்டுளளது.ஏனைய சந்தேக நபர்களான சாமித்தம்பி சிறீஸ் கந்தராஜா, தாமோதரம் பிரதீபன ஆகியோரே எதிர்வரும் புதன் கிழமைவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற)

# கட்டுரைப் போட்டி

(கொழும்பு)

சர்வதேச சிஙக சமாஜங்களின் இணையம் பிராந்தியம் 306A ஆண்டு தோறும் நடாத்தும் போதைவஸ்து, எயிட்ஸ் சம்பந்தமான நடளாவியரீதியிலான கட்டுரைப் போட்டியை இவ் வாண்டும் ஸ்ரீலங்கா போதைவஸ்து எதிர்ப்புச் சங்கத்துடன் இணைந்து நடாத்தவுள்ளது.

இப் போட்டியில் 15வயது தொடக்கம் 19வயதுக்கு உடபட்ட சகல பாடசாலை மாணவ, மாணவிகளும் பங்கேற்கலாம்.

ஆக்கங்கள் மும்மொழிகளிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

"எச்.ஐ.வி.எயிட்ஸ் மரணப்பிடியில் மரணகுலம் போதைவஸ்துகள்" பொன்னான எதிர்காலம் மாண்ணாகிறது ஆகிய தலைப்புக்களில் கட்டுரைகள் 4 பக்கங்களுக்குக் குறையாமலும் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும், இருக்கவேண்டும்.

ஆக்கங்கள் மாணவரின் சொந்தமான ஆக்கம் எனவும் அவருடைய பிறந்த திகதி, வகுப்பு போன்ற விபரங்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவும் வேண்டும்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்குத் தெரிவு செய்யப்படும் கட்டுரைகளுக்கு தலா 5ஆயிரம் ரூபா, 3ஆயிரம் ரூபா, 2ஆயிரம் ரூபா பணப் பரிசுகள் வழங்கப்படும்.

(கடடுரைகள் யாவும் பிராந்திய இணைப்பாளர் போதைப் பொருள் பாவனை/ எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம்) 12/3 பிரான்ஸிஸ்றோட் வெள்ளவத்தை, கொழும்பு-06 என்ற முகவரிக்கு 28.02.2005அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப் படவேண்டும். (க)

# இந்தியாவுடனான போட்டிக்கு அக்தருக்கு வாய்ப்பு மறுப்பு?

இந்தியத் தொடருக்கான பாகிஸ்தான் அணியில் அக்



தருக்கு வாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது எனத் தெரிகிறது.

இதனை பாகிஸ்தான் கிரிக்கெற் போர்டு தலைவர் ஷாரியார்கான் அசமாகத் தெரிவித்தார்.

எதிர்வரும் 25இல் இந்தியா செல்லும் பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கவுளளது. இத்தொடரில் கலந்து கொள்ள புயல்வேகப் பந்துவீச்சாளர் அக்தர் மிகுந்த ஆவலுடன் இருந்தார். ஆனால் இவருடைய சமீபத்திய நடவடிக்கைகள் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அவுஸ்திரேலியத் தொடரின் போது நடன பெண் கிளப்பிய பாலியல் புகாரில் இவர் சிககினார். இந்தப் புகாரை மறுத்த இவர், அணி மோசமாகச் செயல்படும் போதெல்லாம் தன்னை பலிக்கடாவாக்க முயற்சிபபதாக வெளிப்படையாக குற்றம் சாட்டினார். இவரது இந்த அணுகுமுறைக்கு பாகிஸ்தான் கிரிக்கெற் போர்டு தலைவர் ஷாரியார் கான் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதுபற்றி இவர் கூறியிருப்பதாவது;

விதிமுறைகளின்படி, அணி நிர்வாகததிடம் கலந்து ஆலோசிக்காமல் வீரர்கள் கருத்து எதுவும் தெரிவிக்கக் கூடாது. இந்த ஒழுங்கு முறையை அக்தர் மீறியுள்ளார். இவர் தன்னிச்சையாகக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். தவிர அவுஸ்திரேலியத் தொடரின்போது இவரது நடத்தை மிகுந்த கவலை அளிக்கிறது.

இது தொடர்பாக அக்தரிடம் விசாரணை நடத்தி கண்டனத்தை தெரிவிக்கவுள்ளேன். அக்தர் அணியின் சிறந்த வீரராக இருந்தாலும், விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்றியாகவேண்டும். இவரது சமீபத்திய நடவடிக்கைகள் காரணமாக இந்தியத் தொடருக்கான அணியில் இவர் தேர்வு செய்யப்படுவதிலும் சிக்கல் ஏற்பட்டுளளது.

கப்டனாக இன்சமாம சிறப்பாகவே செயல்பட்டு வருகிறார். தென்னாபிரிக்காவில் 20வயதான ஸ்மித் கப்டனாக நியமிக்கப்படுகிறார். இத்தகைய கலாசாரம் பாகிஸ்தானில் இல்லை. இன்சமாம் துடிப்பாகச் செயல்படுவதில்லை என்று கூறுவதை ஏற்க இயலாது. இவரது மகத்தான அனுபவம் அணிக்கு கைகொடுக்கும்.

இதுதவிர இளம் வீரர்களும் தங்கள் திறமையை வெளிப்படுததத் துவங்கியுள்ளனர். அவுஸ்திரேலியத் தொடருக்குப் பிறகு அணியின் வீரர்கள் மனது உடல் அளவில் புதுத் தெம்பைப் பெறுவர். இது இந்தியத் தொடரில் சாதிக்க மிகவும் உதவ்கரமாக அமையும் இவ்வாறு ஷாரி யார்கான் கூறினார். (ற)

# ஆசிய கோப்பை கிரிக்கெற்

# இம்முறை பாகிஸ்தானில்

2006இல் ஆசிய கோப்பை கிரிக்கெற் தொடர் பாகிஸ்தானில் நடக்கவுள்ளது.

கடந்த 2004ல் ஆசிய கோப்பை போடடி இலங்கையில் நடந்தது. இம்முறை போட்டியை பாகிஸ்தானில் நடந்த ஆசிய கிரிக்கெற் கவுன்சில் முடிவு செய்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெற் போர்டு தலைவர் ஷாரியார் கான் கூறுகையில,

ஆசிய கிரிக்கெற் கவுன்சில் கூட்டத் தொடர் சமீபத்தில் துபாயில் நடந்தது. இதில் ஆசிய கிரிக்கெற் தொடரை நடத்த எஙகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுளளது.

கடந்த 2000ல் இத்தொடர் பாகிஸ்தானில் நடக்கவேண்டியது. அப்போது பாதுபாப்புக் காரணங்களுக்காக இந்திய அணி இங்குவர மறுத்ததால் போட்டியை நடத்தும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்காமல் போனது. ஆனால் இம்முறை இந்தியா, இலங்கை உளளிட்ட அனைத்து நாடுகளும் தொடரில் பங்கேற்க சம்மதம் தெரிவித்துள்ளன என்றார். (ற)

# புளோயம்பண்டீன் கிரிக்கெற் 2வது போட்டி சமநிலையில்

இங்கிலாந்திற்கும் தென்னாபிரிக்காவிற்கும் இடையே புளோம்பண்டீனில் நடந்த 2வது ஒருநாள போட்டி சமநிலையில் முடிந்தது.

முதலில் டாஸ்வென்ற தென்னாபிரிக்க அணி, இங்கிலாந்தினை துடுப்பெடுத்தாடப் பணித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெற் இழப்பிற்கு 270 ஓடடங்களை எடுத்தனர். இந்த அணியில் அதிகபட்சமாக பீட்டர் சன் ஆட்டம் இழக்காமல் 108 ஓட்டங்களை எடுத்தார்.

பின்னர் ஆடிய தென்னாபிரிக்க அணி 8 விக்கெற் இழப்பிற்கு 270ஓடடங்கள் எடுத்தது. இதையடுத்து இந்தப்போட்டி சமநிலையில் முடிந்தது.

தென்னாபிரிக்க அணியின் சாபில் கிப்ஸ் 78 ஓட்டங்களும் காலிஸ் 63 ஓட்டங்களும் எடுத்தனர். வெற்றியின் விளிம்பில் இருந்த தென்னாபிரிக்க அணி பின்னால் வந்த துடுப்பாட்டக்காரர்கள் செய்த தவறினால் எளிதான வெற்றியை நழுவவிட்டது.

இங்கிலாந்து சார்பில் கடைசி ஓவரை வீசிய அலி சிறப்பாக பந்துவீசி இந்தப் போட்டியை சமநிலையில் முடிக்க பெரும் பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# விளையாட்டு செய்திகள்



லண்டனில் நடந்த பரீமியர்ஷிப் கால்பந்து போட்டியில், மான்செஸ்டர் யுனைடெட் 4-2 என்ற கோல் கணக்கில் அர்சனேல் அணியை வீழ்த்தியது. மான்செஸ்டர் யுனைடெட் வீரர் அடித்த பந்தை பாய்ந்து சென்று தடுக்க முயல்கிறார் அர்சனேல் வீரர் தியரி ஹென்றி.

# உறவுகள் சீரடையும் போது இருதயம் மலர்கின்றது

## வெள்ளிநற்சிந்தனை

கல்கிபகவான் உங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம் உறவுமுறைகளைச் சீர்செய்த



லைப் பற்றியேயாகும். நாட்டிலோ, வீட்டிலோ பிரச்சினை தோன்ற ஆணிவேர் உறவுமுறை சீரற்று இருப்பதேயாகும்.

உறவுமுறைகளைச் சீர்செய்தல் என்றால் யாருடைய கால்களிலோ விழுந்து தான் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்பது அவசியமில்லை. அவ்வாறு செய்தாலும் தவறுஇல்லை. அது மிகவும் நல்லதே. நீங்கள் மற்றவர்களுடைய பாதங்களை அழுத்தித் தொழும்போது அந்த நபருடைய சில நாடிகளின் நுனிகள் தூண்டப்படுவதால் அவர்களாகவே உங்களை மன்னித்து விடுவார்கள். ஆனால் இது அவ்வளவு முக்கியமல்ல எது முக்கியம் என்றால் மனிதர்களின் இதயம் மலரவேண்டும். இதயம் மலரவேண்டுமாயின் நாம் அன்பைக் கண்டுபிடிக்க வேண்டும். அது தான் நான் சொல்லும் உறவுமுறை எனக் கூறுகின்றார்.

அதாவது நாம் நம்மை அறிந்து கொள்ளவேண்டும். உதாரணமாக உங்களுடைய தந்தை உங்களை அவமதித்து விட்டார் அல்லது மனதைக் காயப்படுத்திவிட்டார். அவர் இப்போது உயிருடன் இல்லை என வைத்துக் கொள்வோம். அந்த மனோகாயம் அல்லது பழிவாங்க நினைக்கும் ஒரு கசப்பான பகை உணர்ச்சி உங்களுக்கு இன்னமும் உள்ளது. அதனை உணர வேண்டும்.

தந்தையை மன்னிக்க வேண்டும். அதற்கு நீங்கள் என்ன புரிந்து கொள்ளவேண்டுமென்றால் மனிதர்கள் ஒவ்வொருவரும் புரோக்கிராம் செய்யப்பட்ட கனணிகள். அவர்கள் சுய இச்சைப்படி செயற்படவில்லை. அவர்கள் அது போல் நடந்து கொள்ள புரோக்கிராம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன்படி செயற்படுகிறார்கள் ஆதலால் இது பற்றி ஆராய்ச்சி செய்யக் கூடாது. ஏனெனில் இது தீர்வுகாண வேண்டிய புதிர் அல்ல. இது அனுபவிக்க வேண்டிய, வாழ வேண்டிய ஒரு புதிர்.

உங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தி அனுபவித்தால் எதுவும் வலியைத்தராது. நீங்கள் எதையும் அனுபவிக்காததால் தான் வலி ஏற்படுகின்றது. உதாரணமாக உணவருந்தும் போது உங்கள் எண்ணம் உணவை விட்டு வேறெங்கோ செல்கிறது. அப்போது உணவின் சுவை தெரிவதில்லை.

ஆகவே நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் மற்றவர்களை மாற்ற முற்படக் கூடாது. அவர்களின் செயலுக்காகக் குறை கூறவும் முடியாது. ஏனெனில் அவர்கள் அதுபோல நடந்து கொள்ள ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது பூர்வ ஜென்ம வாசனை, அன்னையின் கர்ப்பத்தில் இருந்த சமயத்தில் நடந்த நிகழ்ச்சிகள், அவர்களது பெற்றோர் வளர்த்த விதம், வாழ்ந்த ஊர், பார்த்த படங்கள், பழகிய நண்பர்கள் கலாசாரம் இதுபோல எத்தனையோ விஷயங்கள் அவர்களை செயற்படுத்துகிறது. மற்றவரிடம் குறை கண்டு பிடித்தல் அல்லது குற்றம் சாட்டுதல் ஒரு வெங்காயத்தை உரிப்பதைப்போல். ஆகவே எடை போடுதல் உறவைக் கெடுக்கிறது.

எனவே அடுத்தவரை எடை போடாதீர்கள் போடவும் முடியாது. யாரை நீங்கள் மோசம் என்று கூறுகிறீர்களோ அவர்கள் உங்கள் பார்வைக்குத்தான் மோசமே தவிர மற்றவர்களுக்கு நல்லவர்தானே எப்போது எடை போடும் பழக்கம் போகிறதோ அங்கே இருப்பதெல்லாம் அன்பு தான். அன்பு என்பது என்னவென்றால் அடுத்தவரை எடைபோடாது அப்படியே ஏற்றுக் கொள்ளுதல் அதுதான் சந்தோஷம். சந்தோஷம் என்பது நல்ல ஆரோக்கியமான உறவுகளில் தான் உள்ளது.

பகவான் கூறுகிறார் சொர்க்கம் என்பது இறந்தபிறகு சென்று அடையக்கூடிய ஒரு விடயமல்ல. இந்த உலகத்தில் இருக்கக் கூடிய சந்தோஷமான உறவு தான் சொர்க்கம். அதிலும் உன்னதமான உறவுமுறை நட்பு என்று கூறியிருக்கின்றார்.

எனவே நாம் அடுத்தவரை எடை போடாமல் அவர்களை அப்படியே அனுபவித்து ஏற்றுக் கொண்டால் உறவுகள் சீரடையும். அப்படி சீரடையும் பொழுது ஸ்ரீகல்கியின் அருள் வெள்ளம் பாய்ந்து வாழ்க்கையிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும் விடுவித்து ஒரு அமைதியான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். □

**திருமதி கலாசுந்தரேசன்**
ஆசிரியர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# மக்கள் குறைகேள் அரங்கு

## மதுபானசாலை திறப்பதற்கான அனுமதியை இரத்துச் செய்யக் கோரிக்கை

| | |
|---|---|
| | விக்ரோறியன்ஸ் |
| பிரதேச செயலாளர், | விளையாட்டுக் கழகம், |
| பிரதேச செயலகம், | சுழிபுரம். |
| சங்கானை. | 27.01.2005. |

ஐயா!

மேற்படி விடயம் தொடர்பாக சுழிபுரம் பிரதான சந்தியில் அமைக்கப்படவுள்ள மதுபானசாலைக்கான அனுமதியினை இரத்துச் செய்வதற்கு எமது கழகத்தின் ஊடாக சுழிபுரம் கிராம மக்கள் சமூகத்தின் ஒட்டுமொத்த கோரிக்கையினை முன் வைக்கின்றோம்.

மக்கள் சமூகத்தின் கோரிக்கைக்கான அடிப்படைக் காரணங்களாவன:-

1) சுழிபுரம் பிரதேசத்தின் பிரதான கல்லூரியான விக்ரோறியாக் கல்லூரி 100 m இடைவெளியில் அமைந்துள்ளது. இக் கல்லூரி தன்னகத்தே 1200 மாணவர்களை கொண்டமைந்துள்ளது.

2) ஆரம்பக் கல்விப் பாடசாலையான ஐக்கிய சங்க வித்தியாசாலை மிக அருகில் அமைந்துள்ளது.

3) தனியார் கல்வி நிறுவனமான ரெமிங்ரன் கல்வி நிலையம், சுழிபுரம் தொழில்நுட்ப நிலையம், சுழிபுரம் வைத்தியசாலை, அறுபத்து நான்கு நாயன்மார் திருக்கோயில், பத்திரிகை விற்பனை நிலையம் என்பன மிகவும் அருகில் அமைந்துள்ளன.

4) மக்கள் அதிகம் கூடும் பிரதான பஸ்தரிப்பிடம் இச் சந்தியருகில் அமைந்துள்ளது.

5) இன்றைய சூழ்நிலையில் இளைஞர் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை கண்கூடு. எனவே இவ்வாறான செயற்பாடுகள் பிரதேச இளைஞர் சமுதாயத்தினை மேன்மேலும் சமூக சீரழிவுகளில் ஈடுபட வழிவகுக்கும்.

மேற்படி, விடயம் தொடர்பாக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிச் சமூகம், ஐக்கியசங்க சைவ வித்தியாசாலைச் சமூகம், என்பன தமது எதிர்ப்பினை எழுத்துருவில் சமர்ப்பித்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள், பொது அமைப்புக்கள், ஊடகங்கள், சமூகப்பொறுப்புடன் தாமதமின்றி உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ப.ஹரிதாசன் | சோ.வேல்முருகன் |
| தலைவர். | செயலாளர். |

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாதிரிக் கிராமத் திறப்பு விழாவில் —அமைச்சர்கள் பங்கேற்பு—

(மட்டக்களப்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் கிளையின் உதவியுடன் மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்டுள்ள சுவிஸ் தமிழ் கிராமம் நேற்றுமுன் தினம் மாலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஆழிப்பேரலையினால் தமது இருப்பிடங்களை இழந்துள்ள கரையோரப் பிரதேசங்களைச் சேரந்த குடும்பங்களுக்காக 200 ஏக்கர் நிலத்தில் இந்தக் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வைபவம் நடைபெற்ற போது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மாவட்ட ஆழிப்பேரலை செயலணிக் குழுவின் தலைவரான அமைச்சர் டி.எம்.தசாநாயக்கா மற்றும் அமைச்சரான அமீர் அலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் தசாநாயக்கா, இந்நிகழ்வில் தனக்கு அழைப்பு விடுக்கப்படாவிட்டாலும் மனிதாபிமான உதவிகளை மதிக்க வேண்டிய கடமைப்பாடு தனக்கு உண்டு என்றார்.

மட்டக்களப்பு விபுலானந்தா இசை-நடனக் கல்லூரி, இந்து கலாசார மண்டபம் ஆகியவற்றில் தங்கியிருந்த 200 குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பணிப்பாளர் சீசர், மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் கு.தேவராஜன் ஆகியோர் உட்பட அரசாங்கத் திணைக்கள அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

(ற)

# யாழ். கல்வியியற் கல்லூரியில் அரும் பொருட்கள் காட்சியகம்

## நுண்கலை மன்றத்தினர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் நுண்கலைத் துறையினர் தொல்பொருள் சாதனங்களைப் பாதுகாத்து காட்சிப் படுத்தக் கூடிய அரும்பொருட் காட்சியகம் ஒன்றை உருவாக்கவுள்ளனர்.

தேடற்கரிய பொருட்களை பாதுகாத்து காட்சிப்படுத்துவதன் மூலம் தமிழரின் பாரம்பரியத்தையும், பண்பாட்டு எச்சங்களையும் நிலைநிறுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் பேணுவதற்குரிய தளமாக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ந்து வருகின்ற இளம் சந்ததியினர் எமது முந்தைய அடையாளங்களை விளங்கிக் கொள்வதற்கு இவை வாய்ப்பாக உலோக, மர, மட்பாண்ட உபகாரணங்கள், சிற்ப மாதிரிகள், கைத்தொழில் அலங்கார சாதனங்கள், இயற்கை செயற்கை அனர்த்தங்களால் அழிவுற்று எஞ்சிய கலைத்துவ மீதிகள், பண்டைய பாவனைப் பொருட்கள் இயந்திர சாதனங்கள், எமது முந்தைய கல்விமான்களின், கலை வல்லுனர்களின் படைப்புக்கள், அவர்கள் பாவித்த பாவனைப் பொருட்கள் போன்றவை சார்ந்த பொருட்களை சேகரித்து இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இது சம்பந்தமான பொருட்களை கையளிக்க விரும்புபவர்கள் கல்லூரியின் நுண்கலைத் துறையினரோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிக விபரங்களுக்கு 0777 034745 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# மரணச் சான்றிதழ்களை வழங்க விசேடதிட்டம் அமுல்

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் மரண சான்றிதழ்களை வழங்குவதற்காகத் துரித செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைக்காக மரண சான்றிதழ்களை விரைவாக வழங்கும் பணிகளை ஆரம்பித்துள்ளதாக பிரதம நீதியரசர் சரத் என்சில்வா தெரிவித்தார்.

நீதவான் நீதிமன்றங்களின் ஊடாகவோ பொலிஸ் நிலையங்கள் ஊடாகவோ வழங்கப்படும் படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் மரண சான்றிதழ்களைப் பெறமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களுக்கு துரிதமாக மரண சான்றிதழ்களை வழங்கும் செயற்றிட்டம் பிரதம நீதியரசரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.(ப-9)

# அனர்த்தங்களை சித்தரிக்கும் வகையில் மாணவர்களுக்கிடையே ஓவியப் போட்டி

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் தரம் -5 முதல் உயர்தரம் வரையான வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்களிடையே சுனாமி ஓவியப் போட்டி, மற்றும் கண்காட்சியை நடாத்துவதற்கு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றுவதற்கான விபரங்கள் வருமாறு:

★ சுனாமிப் பேரனர்த்தத்தின் விளைவுகளையும் அதிலிருந்து மீள்வதற்கான நம்பிக்கை ஊட்டுவதுமான கருப்பொருளை ஓவியங்கள் கொண்டிருக்கவேண்டும்.

★ ஓவியங்கள் நவீனம் சார்ந்ததாகவோ மரபு சார்ந்ததாகவோ அமையலாம். அத்துடன் 18' நீளமும் 14' அகலமும் கொண்ட வெள்ளை வரைதல் தாளில் அல்லது பிறிஸ்டல் போட்டில்வரைய வேண்டும்.

★ பஸ்ரல் வர்ணம், நீர் வர்ணம், தூள்வர்ணம், எண்ணெய் வர்ணம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை ஓவியங்களுக்கான வர்ண ஊடகமாக அல்லது கலப்பு ஊடகமாகப் பயன்படுத்தலாம்.

★ ஓவியங்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வப் பகுதி வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கவேண்டும்.


இது தொடர்பான மேலதிக விபரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் பெற்றுக் கொள்ளமுடியும் என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

(க)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 38

"அவர் ஒருமுறை வணங்கினால் போதும் பல முறை வணங்கி அதிகம் தொந்தரவு தரக்கூடாது. நேரமாகிறது. வா போகலாம்" என்றார்.



மனைவி "பெரியவர்களை எத்தனை முறை வணங்கினால்தான் என்ன? பலமுறை காப்பி குடிக்கிறோமே!" என்றார்.

இப்படி அவர்களுக்குள் வாக்குவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்த உரையாடல் என் செவியில் விழுந்து கொண்டிருந்தது.

கடைசியில் சக்தி தான் வென்றது. சிவம் தோற்றது. இருவரும் அருகில் வந்து வீழ்ந்து வணங்கினார்கள். திருநீறு தந் தேன். என் அருகில் இருந்த புத்தகக் குவியலின் மீது கணவருடைய பார்வை பதிந்தது. அப் புத்தகங்களில் மதுரை ஆதீனம் மகாசந்நிதானம் எழுதிய "இறந்தவர்கள் வாழும் நிலையும், அவர்களுடன் பேசும் முறையும்" என்ற நூல் இருந் தது. இந்த நூலைக் கண்டவுடன் அவர் ஒரு துள்ளு துள்ளினார்.

தன் மனைவியைப் பார்த்து "அடியே! இவரைப் பல முறை வணங்க வேண்டும். இவர் பெரிய உபகாரி. ஆ! இவர் எனக்குச் சிறந்த உதவி செய்துள்ளார்" என்று கூறி என்னை மீண்டும் மீண்டும் விழுந்து வணங்கினார். மகிழ்ச்சியால் துள்ளித்துடித்தார். அவர் அப்போது அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. 'இந்த நிகழ்சியைப் பார்த்த எனக்கு ஒன்றும் விளங்க வில்லை. 'ஐயா! உங்கள் மகிழ்ச்சிக்குக் காரணம யாது?' என்று கேட்டேன்.

அவர் அகமும், முகமும் மலாந்து கூறுகின்றார். "சுவாமி! இவள் என் மனவை. இவளுடைய தகப்பனார் எனக்குத் தருகிறேன் என்று கூறிய சீதனத்தில் ஒரு பகுதிதான் தந்தார். மற்றப்பகுதி தராமல் இறந்து விட்டார். நான் அதுபற்றிக் கவலைப்பட்டுக்கொண்டே இருந்தேன். இப்போது 'இறந்தவர் வாழும் நிலையும் அவர்களோடு பேசும் முறையும்' என்ற இந்த நூலைப் பார்த்தேன். இப்புத்தகத்தில் ஒன்று எனக்குக் கொடுங்கள். நான் என் இறந்த மாமனாருடன் பேசி பாக்கியுள்ள சீதனத்தை வசூலிக்கப் போகிறேன். இந்த அரிய புத்தகத்தை இந்தியாவிலிருந்து கொணர்ந்து தந்த உதவிக்காக உங்களைப் பலமுறை பணிகின்றேன்" என்றார்.

எனக்குச் சிரிப்பு அடங்கவில்லை. மாண்டு போன மாமனாருடன் சீதன் பாக்கி வசூலிக்கப் போகின்றாராம். இப்படியும் ஒரு மருமகனா? மாப்பிள்ளைகளுக்கு எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி ஏற்படாது போலும். பெண்ணைப் பெறுகிறபோதே பெருந்துன்பத்தையும் பெறுகின்றார்கள் என்று எண்ணினேன்.

### *வாய்த் துடுக்கால் வந்த துயரம்*


திருச்சிலாப்பள்ளியில் மாதந்தோறும் மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் அமாவாசையன்று எனது விரிவுரை நடக்கும். அந்த விரிவுரைக்காக ஒரு சமயம் அமாவாவை முதல் நாள் திருச்சிக்கு மூன்றாம் வகுப்பு டிக்கட்டு எடுத்துக்கொண்டு சென்னையில் திருவனந்தபுரம் ரயிலில் ஏறி அமர்ந்திருந்தேன். இது 1936இல் நடந்தது. அப்பொழுது வலலூர்த் திருப்பணி நடந்து கொண்டிருந்தது.

ரயில்வே டிக்கட்டுப் பரிசோதகர் திரு.ஜம்புவேல் முதலியார் திருச்சியில் குடி இருந்தார். இவர் இப்போது காஞ்சிபுரத்தில் வாழ்கிறார். 85வயதாகிறது. (சமீபத்தில் காலமாகி விட்டார்) இவரது புதல்வி சிந்தாதிரிப்பேட்டையில் வாழ்கின்றபடியால் மகள் வீட்டிற்கு வந்த இவர் என்னுடன் ரயிலல் ஏறி எதிர்சீட்டில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தார். தாம் பரத்திற்கு மேல் தான் அவரது டியூடி தொடங்கும். அதனால் சாதாரண உடை உடுத்துக் கொண்டிருநதார். "சுவாமி! திருச்சிக்குத்தானே போகிறீர்கள்? நான் உங்கள் பிரசங்கம் கேட்டுத்தான் முருக பக்தனானேன்" என்று கூறினார்.

முதல் மணி அடித்துவிட்டது. அப்போது மூன்று பெரிய ஜவுளி மூட்டைகளை நான் இருந்த பெட்டியில் ஏற்றி விட்டு ஒருவன் வண்டியில் ஏறி "அப்பா" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டான். நான் அவனை உற்றுப்பார்த்தேன். அவன் என்னைப் பார்த்து "ஐயா! நீங்கள் எங்கே போகிறீர்கள்!" என்று கேட்டான்.


"நான் திருச்சிக்குப் போகின்றேன்" என்றேன்.


எதிரில் இருந்த ஜம்புவேல் முதலியாரைப் பார்த்து "இந்த ஐயா எங்கே போகிறார்?" என்று கேட்டான்.



திருவிழா இறுதி ஆசீரின் போது...

தேரிரேறிவரும் அன்னை...





அன்னையின் இறுதி ஆசீரின் போது...

புதுமை அன்னையின் திருவிழாத் திருப்பலி நேற்று அன்னை வீற்றிருக்கும் குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம்

"நான் திருச்சிக்குப் போகின்றேன்'' என்றேன்.

எதிரில் இருந்த ஜம்புவேல் முதலியாரைப் பார்த்து "இந்த ஐயா எங்கே போகிறார்?" என்று கேட்டான்.

நான் "அவரும் திருச்சிக்குத்தான் போகின்றார்!'' என்றேன்.

அவன் "நல்லதாகப் போச்சு'' என்றான்.

"ஐயா! நாங்கள் இருவரும் திருச்சிக்குப் பேனால் உனக்கு இதில் என்ன மகிழ்ச்சி'' என்று கேட்டேன்.

அவன் கூறினான்! "ஐயா! டி.டி.ஆர்கள் இருக்கின்றார்களே! மோசமானவர்கள், நான் இந்த மூனறு மூட்டைகளை எடை போடவில்லை. இந்த டிக்கட்டுப் பரிசோதகர்கள் பொல்லாதவர்கள், பாட்டன் வீட்டு ரயில் மாதிரி எண்ணிக்கொண்டு இந்த மூட்டையைக் கண்டு அபாராதம் போடுவான். மட்டரகமானவன். டி.டி.ஆர் வந்தால் ஒரு மூட்டையை உங்களுடைய என்று சொல்லுங்கள். அந்த் ஐயா ஒரு மூட்டையைத் தன் மூட்டை என்று சொல்லட்டும். ஒரு முட்டையை நான் என்னுடையது என்று சொல்வேன்'' என்று சொன்னான்.

இவ்வாறு யாரைப்பார்த்து சொல்லிறான்? டி.டி. ஆரைப் பார்த்தே சொல்லுகிறான்.

நண்பருக்கு முகம் சிவந்துவிட்டது. தாம்பரத்திற்கு மேல் டியூட்டி தொடங்க வேண்டிய அவர் சேத்துப்பட்டுபோன உடனேயே கோட்டு, பச்சை டர்பன் இவைகளை அணிந்து கொண்டு அவனைப் பார்த்து "எடு டிக்கட்டு'' என்று உரத்த குரலில் கூறினார். அவன் அப்படியே பேய றைந்தால்போல அசந்துவிட்டான். இது ஒரு பெரிய பரிதாபமான நாடகம். பிறகு நான் சமா தானம் செய்து ஒன்றும் இடரில்லாமல் செய்துவிடடேன்.

### பக்தியைக் கெடுக்கலாமா?

1937புரசைவாக்கம் டாணாத் தெருவில் ஒரு சிறுதேவதைக்குப் பலியிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அங்கு நான் சென்று "கடவுள் பெயரால்-கருணையே வடிவான கடவுளின் திருமுன் உயிர்ப் பலியிடுவது பாவம். வேறு எந்த மதத்தினரும் திருக்கோயிலில் உயிரிப்பலி தருவதில்லை. இந்துக்களாகிய நாம் இவ்வாறு செய்வது மன்னிக்க முடியாத குற்றம். கிளியின் சிறகை வெட்டி 12நாள் கூட்டில் அடைத்த பாவத்தால் கோபன்னா என்ற ராமதாசர் பன்னிரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனைத் துயரத்தை அனுபவித்தார். அன்பு வெள்ளம் ஓடுகின்ற கோயிலில் உதிர வெள்ளம் ஓடக்கூடாது. ஆதலால் பலியிடுவது பாவச்செயல்'' என்று உருக்கமாக விரிவுரை செய்தேன். அங்கிருந்த மக்கள் என் சொற்களைக் கேட்டுப்பலியிடுவதை நிறுத்திவிட்டார்கள்.

(தொடரும்)

புதுமை அன்னையின் திருவிழாத் திருப்பலி நேற்று அன்னை வீற்றிருக்கும் குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

## நாகரிகத் திருடர்கள்

(கொழும்புத்துறை)

யாழ்பபாணத்தில் நாகரிகத் திருடாகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றனர்.

ஈச்சமோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றில் வெளி நாட்டுக்கார வேசத்தில் வந்தவர் மூதாட்டி ஒருவரிடம் தான் சுவிஸ் நாட்டில் இருந்து வருவதாகவும் உங்கள் மகன் நலமாக உள்ளார் என்றும் கூறி சோடாவையும் வாங்கி குடித்தார்.

பின்னர் அவசரமாக ஒரு அலுவல் இருக்கின்றது ஆயிரம் ருபா தாருங்கள் என்று நசுக்காக காசை கறந்து கொண்டு மறைந்துவிட்டார்.

இதே மூதாட்டியிடம் கடந்த மாதம் கையடக்கத் தொலைபேசியையும் விசமிகள் அபகரித்துச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. (ப-31)

## திருடன் மடக்கிப்பிடிப்பு

(துன்னாலை)

பகல் வேளையில் வீட்டினுள் புகுந்து திருட முயன்ற ஒருவனை வீட்டின் உரிமையாளர் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் கடந்தவாரம் கரவெட்டி இலகடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை பேருந்துச் சாலை நடத்துநராக பணிபுரிபவரின் வீட்டிலேயே திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது.

பகல் வேளைகளில் வீட்டின் உரிமையாளர் வீட்டில் இல்லாதமையை அவதானித்து வந்த திருடன் சமபவதினத்தன்று உரிமையாளர் இல்லையென நினைத்து வீட்டில் நுழைந்து திருட முயற்சித்துள்ளான்.

ஆனால் அன்றையதினம வீட்டின் உரிமையாளர் வீட்டில் இருந்தமையினால் திருடனின் திருட்டு முயற்சி முறியடிக்கப் பட்டது.

அததுடன் திருட்டு முயற்சியில ஈடுபட்டவனை குறித்த வீட்டின் உரிமையாளரும் அப்பகுதி மக்களும் மடக்கிப்பிடிதது பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (க-101)

# கைதியின் உறவுகள்

அந்திசாயும் வேளை இதமான தென்றல் வேபபமரததில் பட்டு சுகமாக அவன்மேனியில் உரசிச்சென்றது. இதமான அந்த வருடலால் சுகமான துயிலிற்கு அழைத்தது. சற்றே கண்களை மூடி அந்த வேப்பமரத்துடன் சாய்ந்த அவனை நினைவுக்குக் கொண்டுவந்தது அந்த மணியோசை. விழிகளை திருப்பியவன் அங்கு ஒவ்வொருவராக சென்றுகொண்டிருப்பதைப் பார்த்தான. ஆம் வெளியே நின்ற கைதிகள் அனைவரும் இரவிற்காக தங்கள் செல்களுக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

சுரேசும் அவர்களின் வரிசையிலே இறுதியாக இணைந்துகொண்டான். மெதுவாக சென்றவனை "டேய் சுருக்கா போடா.." என்று மிரட்டியது ஒரு ஜெயிலரின் குரல். நிரையாகச் செனறு இரவுச்சாபபாடடை வாங்கிக்கொண்டு தன் செல்லினுள் நுழைந்தான் சுரேஸ். இரவுச் சாப்பாட்டை முடித்தவன் அந்த கம்பிக கதவுகளூடாக வெறித்துக்கொண்டிருந்தான்.

ஏதோ நினைத்தவன் போல சுவரோரமாக இருந்த காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக்கொண்டு தரையோடு மெதுவாக தன் உடலை சாய்த்துக்கொண்டான். அவன் கைகள் அந்த வெள்ளைக் காகிதத்தில் அழகிய தமிழ் எழுத்துக்களை வரைந்தது.

என்றும் உயிரான,
கீர்த்தனாவிற்கு!

உன்னையே சுவாசித்துக்கொண்டிருக்கும் சுரேஸ் எழுதுவது. கீர்த்தனா இது உனக்கு நான் எழுதும் முதல் கடிதமல்ல. நான் கைதியாகி 8வருடமாகிறது. எனது எத்தனையோ கடிதங்களுக்கு நீ பதில் தரவில்லை. இருந்தும் உன்னையே எண்ணிக்கொண்டிருக்கும் இந்த ஜீவன் எழுதும் இறுதிக் கடிதம் இது.

உன்னை எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் வாய்ப்பு வருகின்ற மாதிரி இருக்கின்றது. எனக்கென்று இருந்தவர்கள் கூட என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. என் அப்பா, அம்மா, நீ மூவரும் தான் என் சொந்தம். கீர்த்தனா உனக்காக நான் நாளை வருவேன் நல்ல செய்தியுடன். இந்தக் கைதிக்கு உறவென்பது நீதான். உன்னோடு சேரும் காலத்தை எண்ணிக் காத்துக்கொண்டிருக்கும் உன் அன்பு நிறைந்த காதலன். இத்துடன் முடிக்கின்றேன்.

இப்படிக்கு
M.சுரேஷ்.

கடிதம் எழுதி முடியும் வேளை அவன் கண்களில் இருந்து வழிந்த நீர்த்துளிகள் காகித்தில் வீழ்ந்து நனைத்தது. அப்படியே படுத்துவிட்டான். அவனது நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தது.

கரவெட்டி என்றொரு அழகிய ஊர். பக்தி ஆரவாரிக்கும் அழகிய இடம். அவ்வூரிலே மாணிக்கசுந்தரததுக்கும் மீனாட்சிக்கும் பிறந்தவன்தான் இந்த சுரேஷ். ஒரேயொருபிள்ளை செல்லமாகத்தான் வளர்ந்தான். நாள் தோறும் ஆனந்தப் பூங்காற்று அவர்கள் வீட்டில் வீசியது. சொந்தம், பாசம், பந்தம் எல்லாமே அவனுக்கு தாயும் தகப்பனும் தான்.

ஒருநாள் சுரேஷ் O/L பரீட்சை எழுதுவதற்காக வெளித் திண்ணையிலே படித்துக்கொண்டிருக்கும் போது படலையருகே ஓர் பெண்ணின் குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தவன் ஆச்சரியத்துடன் 'யாரது? நான் இவளை இவ்வளவு காலம் பார்க்கவேயில்லையே...' என்று எண்ணியவாறு வீட்டுக்கு வாறவங்கள உள்ளுக்க கூப்பிட்டு என்ன? ஏது? என்று கேட்கத்தானே வேண்டும். என எண்ணியவன்,

"வாங்கோ...!" என்றவாறு வாசற்படிக்கட்டுக்கு வந்தவன் "நீங்க யாரு?" என்று கேட்கும் போதே சமையலறையில் இருந்த மீனாட்சி வெளியே வந்தவள்

"அட கீர்த்தனா.. வாம்மா வா.." என்று புன்னகையுடன உரிமையோடு அழைத்துக்கொண்டாள்.

"டேய் சுரேஷ் நீ கதைச்சுக் கொண்டிரு. நான் போய் தேத்தண்ணி போடுறன்" என்று கூறிவிட்டு சமையல் கட்டில் புகுந்தாள் மீனாட்சி.

சுரேஷ் ஓரமாக ஒரு கதிரையைப் போட்டு உட்கார்ந்து கொண்டான். கதிரையில் இருந்தவன் புத்தகத்தையே புரட்டிக் கொண்டிருந்தான். அந்தநேரம் பார்த்து மீனாட்சியும் கையில் தேநீருடன் வெளியே வந்தாள். தேநீரைக் கொடுத்த மீனாட்சி சுரேஷை நோக்கியவளாக,

"டேய் என்ரா வெட்கப் படுறாய்...? கீர்த்தனா உன்ர மாமன் பொண்ணுடா. உன்னை கட்டிக்கப் போறவள்" என்றாள்.

சுரேஷிற்கு அவ்வீடத்தில் நிற்க சங்கடமாக இருந்தது. கீர்த்தனாவை நோக்கி சிறிய புன்னகையை மலரவிட்டு அறையினுள் சென்றவன் யன்னலோரமாக நின்று அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆம், அவள் வேறு யாருமல்ல. மீனாட்சியின் அண்ணனின் மகள்தான். சின்ன வயதிலேயே தன் தாய் தகப்பனுடன் வெளிநாடு போனவள், இப்ப வளர்ந்ததும் ஊரிலுள்ள உறவுகளைப் பார்த்துப்போக வந்திருக்கினம்.

சின்ன வயதிலேயே சுரேசிற்கும் கீர்த்தனாவிற்கும் கல்யாணம் செய்வதாக இரு வீட்டாரும் ஒப்புதல் செய்திருந்தனர். உறவுகளைப் பார்க்க வந்தவர்கள் ஊரும் பிடித்துப்போக இங்கே இருப்பதாக முடிவும் பண்ணிவிட்டார்கள். அதனால்தான் சொந்தத்திலேயே மகளை கட்டிவைக்க ஆசைப்பட்டனர்.

அன்னிய தேசத்தில் எவ்வளவுதான் வசதயாக இருந்தாலும ஒருவேளை கஞ்சியோட சொந்த மண்ணில் இருந்து அதில் கிடைக்கும் சுகம் எக்கச்சக்கம்.

மீனாட்சியின் அண்ணன் கனகிற்கு ஆசைக்கொரு மகள். சொத்திற்கு ஒரு வாரிசு மீனாட்சிக்கு. தங்கட குஞ்சுகள் ரண்டுக்கும் ஒரு கல்யாணம் நடத்தி முடிச்சா அதுகளின்ர பொறுப்பும் குறைஞ்சிடும். பின்பு பேரப்பிள்ளைகளைத் தாலாட்டிக்கொண்டிருக்கலாமென ஆசைப்பட்டார்கள்.

இப்படியே நாலு வருசமாகியது. சுரேசிற்கும் கீர்த்தனாவிற்கும் காதலும் வளர்ந்து கொண்டிருந்தது. காதல் 16 வயதில் ஆரம்பித்து இப்போது 20 வயதில் நிற்கிறது. காதலர்களுக்கு தடையிருக்கவில்லை. பெற்றவர்கள் கூட சம்மதம் கூறிவிட்டால் கேட்கவா வேண்டும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை சுரேஷ் வீட்டிலிருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். அப்போ தகப்பன் மாணிக்கசுந்தரம் வெளியில் போய் வந்தவர் வெயில் கொடுமையால் ஏதோ முணு முணுத்துக் கொண்டு வந்தார்.

"அப்பா என்ன ஏதோ முணுமுணுக்கிறது மாதிரிக் கிடக்கு" என்றான் சுரேஷ்.

"என்ன பெடிப்பயலுக்கு நக்கலே, நான் இந்த வெயிலுக்கால பட்டுவாற பாடு அவன்ர கதையும் ஆளும்" என்று சீறிப்பாய்ந்தார். சுரேஷ் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு எழுதிக் கொண்டிருந்தான். மாணிக்கம் மீண்டும் அவனை நோக்கி,

"டேய் நான் செல்லத்துரையோட கதைச்சனான். அவன் தன்ர கம்பனிய கவனிக்க ஆளில்லையாம் கொஞ்ச நாளைக்கு போய் நில்" என்று கூறிவிட்டு சுரேஷின் முகத்தைப் பார்த்தார். சுரேஷ் சடாரெனத் திரும்பி,

"என்ன? கொழும்புக்கோ? எப்ப போகோணும் சொல்லுங்கோ. எனக்கும் கொழும்ப பார்க்கிறதாவும் இருககும்" என்றான்.

"சரி சா' திங்கட்கிழமை போவதற்குரிய ஆயத்தமெல்லாம் செய்" என்று கூறிவிட்டு சாப்பிடுவதற்கு அறையில் புகுந்தார். தகப்பன் சாப்பிடுவதற்கு நுழைந்த போது அவனும் தகப்பனுடன் சேர்ந்து தாயிடமும் சம்மதம் பெற்றுக் கொண்டான். புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களை செய்து முடித்த சுரேஷ், கீர்த்தனாவிடம் சொல்வதற்காக சைக்கிளை எடுத்துக்கொண்டு கேற்றைத் தாண்டி சென்று கொண்டிருந்தான். கால் மிதியும் அவனுக்கென்று வேகமாகச் செயற்பட்டது. அடுத்த கணத்தில் கீர்த்தனாவின் கேற்றில் சைக்கிள் நின்றது.

"கீர்த்தனா.. கீர்த்தனா..." என்று கூப்பிட்டவாறே உள்ளே சென்றான். சென்றவனை வரவேற்றாள் அவன் அழகுதேவதை கீர்த்தனா.

"வாங்கோ... வாங்கோ ஐயா என்ன இந்தநேரம்... என்ன பிரச்சினை" என்றாள்.

"ஒரு பிரச்சினையும் இல்ல. உன்னோட கொஞ்சம் கதைக்க வேணும்" என்று பதிலளித்துக் கொண்டே சைக்கிளை முன் கோலில் நிறுத்திவிட்டு இருவரும் நடந்தனர்.

"ஒவ்வொரு நாளும் தான் நாம் கதைக்கிறமே. பிறகென்ன புதுசா" என்றவளை சிறிய புன்னகையுடன் ஏறிட்டவன்,

"இஞ்ச பாரும் கீர்த்தனா, நான் நாளைக்கு கொழும்பு போகலாம் எண்டிருக்கிறன். அதுதான் சொல்லிட்டுப் போகலாம் எண்டு வந்தனான்" என்றான்.

"என்ன? கொழும்புக்கோ ஏன்?" என்றவளை நோக்கி,

"அப்பாவின் சினேகிதரின் கம்பனிய கவனிக்க ஆளில்லையாம். அதுதான் கொஞ்ச நாளைக்கு நிண்டுட்டு வருவம் என்று போறன்"

"சரி போயிட்டு எப்ப திரும்புறது"

"என்ன ஒரு ஆறு மாசத்தால அவரின்ர மகன் வந்திடுவாராம் பிறகு நான் அங்க நிக்க மாட்டன்".

"சரி சரி எங்க போனாலும் நானொருத்தி இருக்கிறனெண்ட நினைப்பு இருந்தாச் சரி" என்றவளை ஏறிட்டுப் பார்த்தான் சுரேஷ்.

"என்ன கீர்த்தனா இப்படிக் கேட்கிறாய்...? என்ர மனசில எண்டைக்கும் இந்த கீர்த்தனாதான். அதை யாராலும் அழிக்கமுடியாது" என்றவன்,

"சரிசரி நான் போயிட்டு வாறன். மாமா மாமியிட்டயும் சொல்லு" என்று கூறிவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு கேற்றைக் தாண்டியவனை கீர்த்தனா வாசலில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். மறுநாள் காலையிலேயே சுரேஷ் கொழும்பு புறப்பட்டான்.

கொழும்பில் செல்லத்துரையின் கம்பனியில் வேலை செய்து கொண்டிருந்த சுரேஷ் ஓய்வு நேரங்களில் வீட்டுக்கு கடிதம் எழுதுவான். இப்படியே அவர்கள் கடிதத்தில் தங்கள் உணர்வுகளைப் பரிமாறிக்கொண்டனர். இப்படியே நாட்கள் நகர்ந்து கொணடிருந்தது.

சுரேஷ் கொழும்புக்குப் போய் ஆறு மாதமாகி விட்டிருந்தது. தன் தாய் தகப்பன் கீர்த்தனா எல்லோரையும் பார்த்துவிட்டு திரும்பி வருவதாக கூறிச் செல்லத்துரையிடம் அனுமதி வாங்கிக் கொண்டு ஒரு வாரத்தில் புறப்படுவதற்குரிய ஒழுங்குகளை செய்து முடித்தான்.

அவன் புறப்படுதவற்கு முதல்நாளே செல்லத்துரையின் மகனும் வந்துவிட்டான். சுரேஷிற்கு சுலபமாகிவிட்டது. மறுநாள் திங்கட்கிழமை விமான நிலையம் புறப்பட்டான். அவனது கார் விமானநிலைய வாகன தரிப்பிடத்தில் நின்றது. கையில் சூட்கேசையும் கைப்பையையும் எடுத்துக் கொண்டு விமானநிலையத்துள் புகுந்தான். நேராக விமான சீட்டைப் பதிவு செய்துவிட்டு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்தான். அப்போது ஒலிபெருக்கியில் பலாலி நோக்கிய விமானம் இன்னும் அரைமணி நேரத்தில் புறப்படும் என அறிவிக்கப்பட்டது.

சுரேஷ் பக்கத்தில் இருந்தவரிடம் பேச்சுக் கொடுத்தான். அவரும் தமிழர்தான் இருவரும் அளவளாவிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென நான்கைந்து பொலிஸ்காரர் மேப்ப நாய்களுடன் விமானநிலையத்தினுள் நுழைந்தனர். பொலிஸ்காரர் ஒவ்வொருவராக துருவித் துருவி சோதனை போட்டனர். ஒரு பொலிஸ்காரர் சுரேசின் பக்கம் வந்தார். சுரேஷின் பயண ஆவணங்களை உன்னிப்பாக பார்வையிட்டார். பார்த்தவர் ஏதோ சிங்களத்தில் சொல்லிக் கொண்டார். உடனே அங்கு நின்ற பொலிஸ்காரர் எல்லோரும் சுரேஷை சுற்றி நின்றார்கள். கொஞ்சம் தமிழ் தெரிந்த பொலிஸ்காரர் ஒருவர் 'உன்னை விசாரணை செய்யோணும் வா' என்றார்.



மா.சிவசோதி
கரவெட்டி

அவர்கள் சுரேஷைக் கூட்டிக்கொண்டு சென்றனர். விசயமறிந்த செல்லத்துரை பதறி விழுந்து என்ன? ஏது என்று கேட்க பொலிஸ் நிலையம் சென்றார். அரைகுறை சிங்களத்தில் செல்லத்துரையும் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தார் பலன் கிடைக்கவில்லை. வீடு திரும்பியவர் ஊருக்கு தகவல் கொடுத்தார்.

இதைக் கேட்டதும் மீனாட்சி பதறினாள். கதறிக் கதறி அழுதாள். பெற்ற தாயல்லவா அவள் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பாய்ந்தது. மாணிக்கம் ஒருவாறு சமாதானப் படுத்தினார். உடனே இருவருமாக கொழும்பு புறப்பட்டனர்.

இந்தச் செய்தி செல்லத்துரை மூலமாக சுரேஷிற்கும் தெரியவந்தது.

(..8 ஆம் பக்கம் பார்க்க)

நொறாட் திட்டத்தின் கீழ்

# யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட மேலும் 10 குளங்களை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால், 'நொறாட்' திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட 15 குளங்கள் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில், இவ்வாண்டு மேலும் 10 குளங்களைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நெடுங்குளம், வண்ணான்குளம், உப்புக்குளம், பால்குளம், மறவகுளம, கன்னாதிட்டிகுளம், கற்குளம், நாச்சிமார்கோவில்குளம், ஆரியகுளம், பிரமணாகட்டுகுளம், நீராவியடி நொச்சிதாழ்வு குளம் மற்றும் நரியன்குளம் என்பனவே தற்போது யாழ்ப்பாண மாநகர சபையின் அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ் வேலைத்திட்டங்களுக்காக அரச அதிபர் கே.கணேஷின் நேரடி மேற்பார்வையில், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நீர்வள சூழலியில் பாதுகாப்புத்திட்ட அலுவலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட மேற்படித் திட்டத்தின் கீழ் காக்கைதீவில் கூட்டெருத் தயாரிககும் பரீட்சார்த்த ஆலை மற்றும் அதற்கான நிர்வாக அலகுக் கட்டடம் என்பன அமைக்கும் ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் நிர்வாக அலகுக் கட்டட நிர்மாணப்பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. இத்துடன், யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள 18 கிலோ மீற்றர் நீளமுள்ள மேற்படி குளங்களின் வாய்க்கால்களையும் புனரமைப்பதற்குமாக முற்பணமாக ஒரு கோடி ரூபா யாழ். மாநகரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இவ்வாண்டு மேலும் 10 குளங்களையும் அவற்றின் வாய்க்கால்களையும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் அனுசரணையுடன் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பண்டாரகுளம், மக்கியாகுளம், நாயன்மார்க்கட்டுகுளம், இலந்தைகுளம், சின்னகுளம், வண்ணான்குளம், பிரப்பன்குளம்; பிள்ளையார் கோவில்குளம் மற்றும் வீரமாகாளி அம்மன் கோவில் குளம் என்பனவே இவ்வாண்டு வேலைத்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இத்திட்டங்களிற்கான நிதி முழுவதும் நோர்வே நாட்டினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

தகவல் கற்கை நிறவனத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் சென்ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நிறுவன இயக்குநர் கே.விக்னேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.


மேற்படி நிறுவன தின வைபவத்தில் ஆண்டுதோறும் வழங்கப்படுவதுபோல் சிறப்புச் சித்தியெய்திய மாணவர்களுக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. கடந்த கல்வியாண்டில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர் ஒருவருக்கு தங்கப்பதக்கமும் வழங்கப்படவுள்ளது.

தங்கப்பதக்கமும் சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ள மாணவர்களின் விபரம் வருமாறு,

சிறப்பு விருதுகள்:

உமா யோகநாதன், தர்சினி வைரமுத்து, சூரியகுமார் பொன்னையா குருசங்கர், சந்திரமோகன் ஜெயராம், அச்சுதா சாம்பசிவமூர்த்தி, நிந்துஜா தர்மகீர்த்தி. (ற)





மார்கழி திருவெம்பாவையையொட்டி வண்ணை வைத்தீஸ்வரா ஆலயத்தில் நடைபெற்ற பஜனையில் கலந்துகொண்டவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மொழியில்துறைத் தலைவி திருமதி ரமேஷ் சுபாஷினி பரிசில்களை வழங்கினார். இந்நிகழ்வின் ஆரம்பத்தில் அவர் உரையாற்றுவதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# பாதிப்புற்ற சகல நாடுகளுக்கும் உலக வங்கி நிதியுதவி வழங்கும்


(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள நிர்மாணிப்பதற்கான உதவியின் முதல் கட்டமாக இலங்கை, இந்தோனேசியா, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு உலகவங்கி 66 கோடி டொலர்களை வழங்கவுள்ளதாக வொசிங்டனை மையமாகக்கொண்டு இயங்கும் உலக வங்கியின் தலைவர் ஜேம்ஸ் வூன்பனிஸன் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவிகள், மற்றும் பொருளாதார உதவிகள், காலத்திற்கு ஏற்ற வகையில் அதிகரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஒவ்வொரு நாடுகளின் அரசுகளுடனும் தனித்தனியாகப் பணியாற்றி வருவதால் பல சவால்களை உலக வங்கி எதிர்நோக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக சமூக மட்டத்தில் மக்களின் பங்களிப்பு, மீளக்குடியமர்வு, தாராளமாக கிடைக்கும் உதவிகளின் நம்பகத்தன்மை போன்ற பல நெருக்கடிகளை கூட்டாக சமாளிக்க வேண்டிய சவால் எழுந்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (க-60)




உலக எயிட்ஸ் தினத்தையொட்டி அண்மையில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கொடிதின ஆரம்ப விழாவை பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் தொடக்கிவைப்பதையும், அருகில் பொதுச் சுகாதார சிரேஷ்ட பரிசோதகர் கிளண்டஸ் மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் கஜானன் ஆகியோர் இருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: கல்வியங்காடு நிருபர்)

# கைதியின்....

(7.பக்கத் தொடர்ச்சி)

அன்றுதான் சுரேஷை வேறு முகாமிற்கு மாத்தினார்கள். அவனைப் பார்க்க பெற்றவர்கள் ஒவ்வொரு பொலிஸ் நிலையமாக ஏறி இறங்கி அலுத்துப்போய் ஊருக்கும் போய்வட்டாாகள.

இண்டைக்கு நாளைக் கெண்டு இப்ப எட்டு வருசமாச்சு. அவன் கண்களில் இருந்த நீர்த் துளிகள் முன்னே இருந்த காகிதத்தில் வீழ்ந்து நனைத்து விட்டது. கடிதத்தை எடுத்து பொலிஸ்காரனைக் கூப்பிட்டு அனுப்பும்படி கூறிவிட்டு அப்படியே உறங்கி விட்டான்.

மறுநாள் காலையிலே அவன் கண்விழித்தபோது அச்சிறையின் அதிகாரி கம்பிகளின் பின்னால் நின்று 'டேய் உனக்கு நாளைக்கு விடுதலை. எல்லாம் எடுத்துவை' என்று கூறிவிட்டு நகர்ந்தார். சுரேஷ் ஆனந்தத்தில் குதித்தான். எத்தனை ஆண்டுகள் இந்த கம்பிகளுக்குள். இப்போது கூண்டிலிருந்து விடுதலையாகும் பறவை போல் அவன் உணர்வுகள் ஆர்ப்பரித்தன.

சுரேஷ் விடுதலையாகி ஊரை நோக்கிப்புறப்பட்டான். பயணம் தொடர்ந்துகொண்டிருந்தது. ரயலின் ஓரமாக இருந்தபடியே இயற்கையை ரசித்தான். பல மணிநேர பயணத்தின் பின் வவுனியாவில் பஸ்சில் ஏறியவன் கிளிநொச்சியை அடைந்தான். பஸ்சில் இருந்து இறங்கி ஒரு கடைப் பக்கம் வந்தவன் கடையில் நின்ற பெடியனிடம் 'தம்பி ஒரு கூல் சோடா தாப்பா' என்றான். 'பெரிசா சின்னனா' என்றான் கடைக்கார பொடியன். 'சின்னனாக் கொடப்பா' என்று கூறிவிட்டு ஒரு வடையை வாங்கி சாப்பிட்டுக்கொண்டே, 'அண்ண என்ன ஒரே வாகனமா இருக்கு நகரக்கூட முடியாம' எனறு பக்கத்தில் நின்ற ஒருவரிடம் பேச்சுக் கொடுத்தான்.

'ஓம் தம்பி இப்ப கொழும்புக்கு வாகனங்கள் போறதால ஒரே வாகன நெரிசல்தான்' என்றார் அவர். கதைத்துக்கொண்டே சோடாவை குடித்துவிட்டு யாழ்ப்பாணம் நோக்கிய பஸ் வெளிக்கிட ஆயத்தமானதும் அவசரமாக காசைக் குடுத்துவிட்டு பஸ்சில் ஏற விரைந்தான்.

மீண்டும் அவன் பயணம் தொடர்ந்தது. சுரேஷ் பஸ்சின் கண்ணாடியை விலக்கி விடுதலை பெற்றிருக்கும் தன் தேசத்தை பார்த்துக் கொண்டு வந்தான். எத்தனை எத்தனை தமிழரின் வாழ்வினை சிதைத்த அரக்கரின் அரண்கள் இருந்த இடம்கூட தெரியாமல் ஒழிந்திருந்தன.

சிலமணி நேர பயணத்தின் பின் ஓரு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வாகனம் நின்றது. சிறிது நேரத்தின் பின் மீண்டும் பயணம் ஆரம்பமான போது யாழ் மண் அவர்களை வரவேற்றது.

தான் பிறந்த மண்ணை நோக்கியவனின் உள்ளம் ஆனந்தத்தில் திளைத்திருந்தது. வெண் பஞ்சுப் பொதிகளிடையே தவழும் வெண்ணிலவைப் போல அவன் மனம் குளிர்ந்திருந்தது இந்த சந்தோசத்தின் பின் நிகழப்போகும் துன்பத்தை அறியாது.

பஸ் நெல்லியடியை அடைந்ததும் பஸ்ஸிலிருந்து இறங்கி வீட்டை நோக்கி அவன் கால்கள் நடைபோட்டன. 'எவ்வளவு மாற்றங்கள் ஒன்றையும் குறிப்பெடுக்க முடியவில்லையே' என்று மனதில் எண்ணியவாறு தொடர்ந்து நடந்தவன், அரைமணிநேர பயணத்தில் வீட்டை நெருங்கினான். வீட்டை நோக்கியவனுக்கு ஆச்சாியமாக இருந்தது.

அவன் கண்களை அவனால் நம்பமுடியவில்லை. அந்த மின்குமிழ்கள் அவன் கண்களைப் பறித்தன. வீட்டை நோக்கினான் கதவு திறந்திருந்தது. மெதுவாக உள்ளே நுழைந்தவனை வரவேற்றது வாசலில் படுத்திருந்த நாய் ஒன்று.

சத்தம் கேட்டு கதவைத் திறந்து கொண்டு வந்தார் ஒரு வயோதிபர். அவருக்கு அறுபது வயதிருக்கும். வந்தவர் வாசலில் நின்ற சுரேஷிடம்,

"என்ன தம்பி, என்ன பிரச்சினை..." என்று அவர் கேட்கவும் சுரேஷ் அதிர்ந்துவிட்டான். 'என்னடாயிது என் வீட்டில் என்னையே கேள்வி கேட்கிறாரே' என்று மனதில் எண்ணியவன் தன்னை அறிமுகப்படுத்தினான்.

"ஐயா, நான் மாணிக்க சுந்தரத்தின்ர மகன். இபபடிதான் விடுதலையாகி வாறன்" என்று சுரேஷ் கூறிமுடிக்கவும், "தம்பி நீங்கள் மாணிக்கம் ஐயாவின்ர மகனே!" என்று வியப்புடன் கேட்டார். ஆம் என்பது போல தலையை ஆட்டினான் சுரேஷ்.

நடந்த சம்பவங்களை சுரேஷிற்குக் கூறத்தொடங்கினார் அந்த முதியவர்.

"தம்பி நீங்கள் கொழும்பு போய் பொலிஸ் பிடிச்சாப்போல உங்கட அம்மாவும் அப்பாவும் அங்க வந்திட்டினம். நாங்களும் இடம்பெயர்ந்து இஞ்ச இருந்தம். உங்களின்ர அம்மா அப்பா இங்க வந்ததும் நாங்கள் எழும்ப அவையளதான் இருக்கச் சொல்லிச்சினம. பிறகு கொஞ்ச நாளால உங்களின்ர அப்பாவை ஆமி பிடிச்சுப்போக அம்மாவும் திரியாத இடமில்ல. பிறகு அம்மாவுக்கும் வருத்தம் வந்திட்டுது. நாங்கள் தான் பார்த்தனாங்கள்.

எப்பவாவது நீங்கள் வந்தா உங்களிட்ட குடுக்கச் சொல்லி ஒரு கடிதத்தையும் இந்தக் காணி உறுதியையும் தந்திட்டு மனுஷியும் போயிட்டுது" என்று கூறி முடித்தார்.

சுரேஷிற்கு தலைசுற்றியது. உறவுகளைத் தொலைத்துவிட்டதை எண்ணிக் கதறினான். அழுதழுது புலம்பினான். அவன் உணர்வுகள் மரத்துப்போனது போலிருந்தது.

அப்படியே சுவரோரமாக சாய்ந்துவிட்டான். வயோதிபர் சுரேஷிடம் அவன் தாய் கொடுத்த கடிதத்தை நீட்டினார்.

சுரேஷ் விம்மல்களுடன் அந்தக் கடிதத்தை கடிதத்தை பாத்து வாசிக்கத் தொடங்கினான்.

என் பாசமகன்,

சுரேஷிற்கு!

தம்பி நீ எங்கள விட்டுப் போனதிலிருந்து உன்னைப் பார்க்க எவ்வளவோ கஷ்ரப்பட்டோம். முடியவில்லை. உன்ர அப்பாவையும் ஆமி பிடிச்சுக்கொணடு போக பிறகு என்ர அண்ணையும் தன்ர மகளை வெளிநாட்டு மாப்பிளை ஒருவனுக்கு கட்டிவைச்சிட்டார். நானும் வருத்தமாக் கிடந்தேன். என்னை இந்த வீட்டில இருக்கிறவையள் தான் பாத்தினம்.

அவையின்ர கடைசிப் பிள்ளை என்னில நல்ல பாசம். டேய் நீ ஒண்டுக்கும் கவலைப்படக் கூடாது. நானும் அப்பாவும் உன்னைப் பார்த்துக்கொண்டுதான் இருப்பம். நீ நல்ல மாதிரி சந்தோசமா இருப்பா.

இப்படிக்கு,
ம. மீனாட்சி.

கடிதத்தைப் படித்து முடிததவன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு அந்த வயோதிபரை நோக்கி சொன்னான்,

"ஐயா எனக்கெண்டு இருந்த சொந்தம் அம்மா அப்பா கீர்த்தனாதான். அம்மா அப்பாவும் போயிட்டனம். என் காதலியும் என்ன வட்டுட்டா. இனி எதற்கு எனக்கு இந்த சொத்து சுகம். எனக்கு ஒண்டும் தேவையில்லை. நீங்களே இருங்கோ" என்று கூறிவிட்டு திரும்பி நடந்தவனின் கரத்தை ஓர் பிஞ்சுக்கரம் பற்றியது.

திரும்பியவன் அந்தக் குழந்தையைப் பார்த்தான்.

"மாமா, நீங்க போகாதங்கோ. எங்களோட இருங்கோ..." என்று அந்தக் குழந்தை சொன்னதும், சுரேஷின் கரங்கள அவளை இறுக அணைத்துக் கொண்டது.

ஆம் சுரேஷிற்கு இப்போது புதிய உறவுகள் கிடைத்தது.

(யாவும் கற்பனை)

# இதய ஆரோக்கியத்துக்கு மாதுளை!



ஹிந்தியில் 'ஏக் அனார் சா பீமார்' என்ற ஒரு பழமொழி உண்டு. நோயுறற மனிதனுக்கு ஒரு மாதுளம் பழமே மருந்து என்பது இதன் பொருள். இது தற்போது லண்டன் ஆராய்ச்சிக் கூடத்தில் உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமான இதயத்துக்கு ஒரு கிளாஸ் மாதுளம் பழச்சாறு போதுமானது என்று இந்த ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் உறுதிபடக் கூறியுள்ளனா.

கொலஸ்ரோல் மற்றும் குறை இரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகளால் இதயத் தசைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை தாமதப்படுத்தும் அபார ஆற்றல் மாதுளம் பழத்துக்குள் ஒழிந்திருக்கிறது. மேலும் இரத்த நாளங்களை குறுகலாக்கி ஆபத்தை விளைவிக்கும் **Atherosclerotic lesions** அளவையும் பாதிப் பங்கு குறைத்துவிடுகிறது.

மேலும் கெட்ட கொலஸ்ரோல் ஒக்ஸினேற்றம் அடைவதற்கு எதிராகப் போராடும் மாதுளம் பழம், அதன்மூலம் மாரடைப்பு மற்றும் பக்கவாத ஆபத்துக்களைத் தடுத்து நிறுததுகிறது. இதனால் பை – பாஸ் அறுவை சிகிச்சைக்கு அவசியமே இல்லாம்ல போகும்.

மற்ற பழவகைகளைவிட மாதுளம்பழத்தில் இதய ஆரோக்கியத்தைப் பலப்படுத்தும் **flavonoids** பொருட்கள் அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒரு டம்ளர் மாதுளம் பழச்சாறானது, 2டம்ளர் சிவப்பு வைனுக்குச் சமம். 10 கப பச்சை தேயிலைக்குச் சமம். 6கப் கொக்கோவுக்குச் சமம்.

இவை எல்லாவற்றிலும் மேற்படி **flavonoids** பொருட்கள் உள்ளன.

---

# நீர் மோர்

காளமேகப் புலவருக்கு ஒருநாள் கடுமையான தாகம். மோர் விற்ற ஒரு பெண்ணிடம் கால்பணம் கொடுத்து ஒரு குவளை மோர் வாங்கினார். மோரில் தாராளமாக தண்ணீர் விட்டிருந்தாள் அப்பெண். வாங்கிய மோரை வாயிலே ஊற்றிய புலவருக்கு அங்கே மோர்ச்சுவையை விட நீர்ச்சுவையே மிகுந்து காணப்பட்டது.

சிரிப்புடன் பின்வருமாறு பாடினார் புலவர்.

**'கார் என்று பேர் படைத்தாய் ககனத்து உறும்போது நீர் என்று பேர் படைத்தாய் நெடுந்தரையில் வந்ததன் பின் வார் என்று மென் முலையார் ஆய்ச்சியர் கை வந்ததன் பின் மோர் என்று பேர்பெற்றாய் முப்பேரும் பெற்றாயே!'**

என்ன புரியவில்லையா......?

விண்ணில் (ககனம்) இருக்குமபோது 'கார் முகில்' என அழைக்கப்பட்டாய். மண்ணுக்கு வந்தவுடன் 'நீர்' என்று பெயர் பெற்றாய். இப்போதிந்த பெண்ணின் கையில் சேர்ந்த நீ, 'மோர்' என்று பெயர்பெற்று முப்பெயர்களையும் பெற்றுவிட்டாயே என்று தண்ணீரைப் பாடுவதாக அமைந்திருக்கும் இப்பாடல் அங்கதச்சுவை கொணடது.

---

# தாகம் தணியுமா?

தண்ணீர்த் தாகம் மனிதனை மட்டுமன்றி அனைத்து விலங்குகளினதும் அடிப்படை உணர்வு. நீரின்றி உயிர்வாழ்தல் என்பது சாத்தியமற்றதாகி விடுகின்றது. உடலில் நீரின் அளவு குறைகின்ற பொழுதே தாக உணர்வு ஏற்படுகின்றது. இதனால் நீரை எப்பாடுபட்டாவது குடிக்க முயற்சிக்கின்றோம்.

இத்தண்ணீர்த்தாகம் எவ்வாறு தோன்றுகின்றது?

மனிதனைப் பொறுத்தவரை தொண்டையும், வாயும் காய்தல் என்பது தாகத்தை வெளிக்காட்டும் ஒரு அறிகுறி என உளவியலாளர்கள் கருதுகின்றனர். அதாவது தொண்டையும், வாயும் காய்தல் என்பது தாகத்தை ஏற்படுத்தாது மாறாக, தாகம்தான் இவற்றை ஏற்படுத்தும்.

உடலில் காணப்படும் 'ஹைபோ தலமசு' எனும் அமைப்பின் நரம்பு முடிவிடங்களில் நீரற்றுப போவதால், அதாவது பிரசாரணவாங்கிகள் நீரின்மையை உணர்வதால் தாக உணர்வு தோன்றுகின்றது. இவ்வுணர்வு மூளையிலுள்ள தாக மையத்தினால் உணரப்படுகின்றது. இவ்வாறு உடம்பில் நீரற்றுப் போதல் 'கலக்காய்வுத் தாகம்' எனப்படும்.

மேலும் இரத்தத்தில் நீரின் அளவு குறைவதனாலும் தாகம் ஏற்படும். இந்நிலை 'ஹைபோவொலிமியா'' எனப்படும். இம் மாற்றமும் மூளையின் தாகமையத்தினால் உணரப்படும். இவ்வாறு உணரப்பட்டவுடன், தொண்டை, வாய், இரைப்பை என்பன காய்ந்துவிடும். இதனால் நீர் அருந்த வேண்டிய தேவை ஏற்படும்.

நீரை அருந்தும் பொழுது தொண்டை, வாய் நனைந்து விடுகின்றது. குடல், இரைப்பை நீரை உறிஞ்சுகின்றது. உடலிலுள்ள வாங்கிகள் இதை உணர்வதால் தாகம் தீர்ந்துவிட்டதாக மூளையும் உணர்கிறது. தாகம் தணிகிறது.

**தொகுப்பு: சொ.நித்தியா, கொக்குவில்.**

---

# மரியாதை கொடுக்கத் தெரியாத மனைவி

மேட்டர்லிக், பெல்ஜியம் நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர்.

மேட்டர்லிக் எழுதிக்கொண்டிருக்கும் போது யாரேனும் அவரிடம் பேசினால் கடுங் கோபம் வந்துவிடும் அருக்கு.

ஒருசமயம் அவர் எழுதிக்கொண்டிருக்கும்போது வெளியே சென்றிருந்த அவரது மனைவி வீடு திரும்பினார். கணவனின் கவனத்தைக் கலைத்துவிடக்கூடாது என்பதற்காக ஓசையெழுப்பாது நுழைந்தார்.

வீட்டினுள் நுழைந்த அவரது மனைவி வீட்டிலிருந்த பொருட்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது கண்டு அதிர்ந்து போய், கணவரிடம் 'யாரோ வந்து திருடிக் கொண்டு போனதுகூடத் தெரியாமல் இப்படி எழுதிக் கொண்டிருக்கிறீகளே..' என்று கேட்டுக் கோபமாகக் கத்தினாள்.

'ஒரு திருடன் என் பணிக்குக் கொடுத்த அளவுகூட மனைவியான உனக்கு மரியாதை கொடுக்கத் தெரியவில்லையே...' என்று கோபம் கொண்டு திட்டத் தொடங்கினார் மேட்டாலிக.


***இனிய சொல் திறக்காத இரும்புக் கதவையும் திறக்கும் நல்ல திறப்பு.**

***உன்னிடமுள்ள திறமை அது எவ்வளவு சிறிதாயினும் பயன்படுத்தத் தவறாதே.**

***காலத்தை நாம் வீணாக்கினால் காலம் நம்மை வீணாக்கும்.**

---

# குறுக்கெழுத்துப் போட்டி இல – 46



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப போடடி இல – 46**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப் பெயர்* :- ..............................

*முகவரி* :- ..............................

..............................

..............................

*இங்கே வெட்டுக* ------------------------------

***மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 10ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.***

## இடமிருந்து வலம்

(1)உலகில் இல்லாதவொன்றை இதற்கு ஒப்பிடுவர். (4)தேர் – இப்படியுமழைபபர். (6)உயரமான பகுதியை இப்படியுமழைப்பர் (வ.இ). (8)இலங்கைப் பிரச்சினை தொடர்பில் இந்நாட்டில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. (9)இது குன்றிலிருந்து உற்பத்தியாகும்.

## மேலிருந்து கீழ்

(1)பூர்வீகச் சொத்து. (2)கட்டட வேலை செய்பவனை இப்படியுமழைப்பர். (3)இடம் – இதனைக் குறிக்கும். (5)ஒரு இலக்கம். (6)புத்திசாலியை இப்படியுமழைப்பர். (7)இறைச்சியை இப்படியும் கூறலாம. (9)'வெள்ளம் வருமுன் இது போடவேண்டும்' என்பர். (கீ.மே).

## குறுக்கெழுத்துப் போட்டி இல.44 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.உற்சவம் 5.தத்தை 6.ஆதவன் 7.புதன் 9.ஞானம் 10.கருணை

### மேலிருந்து கீழ்

1.உத்தமன் 2.வனிதை 3.சங்கீதம் 4.கடன் 7.புடம் 8.கணை.

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- **P.திருச்செல்வம்**
**கூழாவடி,**
**ஆனைக்கோட்டை.**

**இரண்டாம் பரிசு** :- **சி.துஷ்யந்தி**
**கைதடி வடக்கு,**
**கைதடி.**

**மூன்றாம் பரிசு** :- **வி.செல்வநாயகம்**
**'சாருஜா'**
**சிவன்கோவில் வீதி,**
**புத்தூர்.**

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுபபெறும் அதிஷ்டசாலிகள்ின் பெயர் வ்பரம்**

கே.அரஸேஸ்வரன், நல்லூர். வ.மன்னர் அன்ரனி, குருநகர். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. ம.சர்மினி, கோண்டாவில். செ.இராசதேவி, கோப்பாய். த.யோகராசா, சாவகச்சேரி. வி.இளங்கோ, கோப்பாய். லோ.அபிராமி, வல்வெட்டி. அ.அனித்தா, சித்தன்கேணி. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. திருமதி P.S.ராணி, சங்கானை. சு.விதுஷன், கொக்குவில். S.நித்தியா, யாழ்ப்பாணம். S.நிகேதினி, வண்ணார்பண்ணை. த.சித்தார்த்தன், தரிப்பூர். து.நக்கீரன், மல்லாகம்.

# ஈழத் தமிழர் வாழ்வில் இருண்ட நாள் - பெப்ரவரி 4

**செ.கஜேந்திரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**

இலங்கை சுதந்திரமடைந்து 56 வருடங்கள் பூர்த்தியடைந்து 57 வது சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

· தமிழர்கள் தமது அரசியல் உரிமைகளையும் வாழ்வுரிமையையும் இழநது 56 வருடங்கள் கடந்து விட்டது.

48ஆம் ஆண்டு முதல் மாறி மாறி ஆட்சிப்பீடமேறிய சிங்களத் தலைவர்கள் தமிழர் நிலங்களில் இருந்து தமிழ் மக்களை விரட்டி அடித்து சிங்களவர்களைக் குடியேற்றியதுடன் "சிங்களம் மட்டும்" சட்டத்தைக் கொண்டுவந்து மொழி உரிமையைப் பறித்தார்கள். கல்வி தரப்படுத்தல் மூலம் தமிழ் இளைஞர்களின் உயர் கல்வி வாய்ப்புக்களை பறித்தார்கள். இனக் கலவரங்களை தூண்டி தமிழர்களை அடித்து உயிருடன் எரித்தார்கள். தமிழ் மக்களின சொத்துக்களை கொள்ளையடித்து தமிழ்ப் பெண்களை கற்பழித்துக் கொன்றார்கள்.

இவ்வாறான இன அழிப்பு நடவடிக்கைளில் இருந்து தம்மை தற்காத்து நிலங்கள் பறிக்கப்படுவதையும் சொத்துக்கள் அழிக்கப்படுவதனையும் தடுப்பதற்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராட முற்பட்டனர். இதன்போது அவர்களது போராட்டத்தினை அடக்குவதற்காக பயங்கரவாதிகள் என பட்டம் சூட்டி பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் சர்வதேச நாடுகளின் நிதியுதவிகளை பெற்று சிங்களப் படைகளை வட கிழக்குப் பகுதிகள் மீது அனுப்பி ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றை கடந்த 20 ஆண்டுகளாக நடாத்தி வந்தது.

அவசரகாலச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்பவற்றை பயன்படுத்தி தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைது செய்து சித்திரவதை செயது பெணகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்ததுடன் சொத்துடமைகளையும் அழித்தொழித்து உயா பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் சொந்த வீடுகளில் இருந்து தமிழர்களை விரட்டியடித்துவிட்டு இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது.

நீண்ட கொடிய போருக்குப் பின் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ அரசியல் பலத்தினால் உருவாக்கப்பட்ட சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் பூர்த்தியடையவுள்ள நிலையில் கூட மக்கள் வாழ்வில் சுபீட்சம் ஏற்படவில்லை. மக்கள் அரசியல் தீர்வோ நிரந்தர சமாதானமோ அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளோ இன்றி ஏமாற்றத்துடன் வெறுமைக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். மாறாக மக்கள் மீது இராணுவ புலனாய்வுத் துறையினரின் நெருக்குவாரங்கள் அதிகரித்துவருவதுடன் புதிய இராணுவக் காவலரண்களும் இராணுவ புலனாய்வு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டு வரும் அப்பக் கடைகளும் அதிகளவில் அமைக்கப்பட்டுள்ளன.

அரசு சமாதானப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் காலத்தை இழுத்தடிதது வருவதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தி தாம் விரும்பும் அரசியல் தீர்வை தமிழ் மக்கள் மீது திணிக்க முயன்று வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளால இடைக்கால யோசனை ஒன்று முன் வைக்கப்பட்டு பேச்சுவார்த்தைக்கு தாம் எப்போதும் தயார் என்று அறிவிககப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் அரசு பேச்சுக்கு தயாராக இல்லை. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைத் தருவதற்கு மட்டுமல்ல, அவசர மனிதாபிமான உதவிகளைக் கூட வழங்குவதறகு அரசு தயாராக இல்லை என்பது தான் வேதனையான விடயம்.

அண்மையில் ஏற்பட்ட சுனாமியின் தாக்கததினால் இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு கரையோரப்பகுதிகள் பெருமளவு உயிா உடமை அழிவுகளையும் சந்தித தது. இலங்கையில் ஏற்பட்ட மொத்த பாதிப்புக்களுக்குமாக அவசர மனிதாபிமான உதவிகளை அரசு உலக நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட பொழுதிலும் கூட அவற்றை பங்கிட்டு வழங்குவதில் தமிழர் தாயகப் பிரதேசத்தினை புறக்கணித்துள்ளது. இந் நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போர்ப் படையணிகளும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உள்ளிட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பொது மக்களினதும் பொது அமைப்புகளினதும் உதவியுடன் வடகிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி மனிதாபிமான தேவைகள் செய்து கொடுக்கபபட்டுள்ளன. இடிபாடுகளை அகற்றி மககளை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்காக அரசு தேவையான உதவிகள் எதனையும் வடகிழக்கிற்கு அனுப்பவில்லை. வீடுகள் இழந்தவர்களை தற்காலிகமாக தங்க வைப்பதற்கு கூடாரங்கள் கூட முழுமையாக அரசினால் அனுப்பி வைக்கப்படவில்லை. மக்கள் மீளக்குடியமர்ந்தார்களோ இல்லையோ கடற்கரையோரங்களில் கடற்படையினரின் காவலரண்கள் மட்டும் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளில் இருந்து எடுக்கப்பட்ட கற்கள், மரங்கள், தகரங்கள், சீற்றுக்கள் கொண்டு மிகவும் விசாலமாக அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட வடகிழக்கின் சார்பாக புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்காக உலக நாடுகளிடம் இருந்து கோடிக்கணக்கில் நிதியுதவிகளைப் பெற்றுக் கொண்ட அரசு தனது கஜானாவை நிரப்பிக் கொண்டுள்ளது. உலகநாடுகளால் வழங்கப்படும் நிதியுதவியில் வடகிழக்கிற்கு சேரவேண்டிய பங்கு சரியான முறையில் சென்று சேர்வதனை உறுதிப்படுத்தும் முகமாக அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று தேவையென வலியுறுத்தப்பட்டு அதற்கு பல உலகநாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்ற இவ்வேளையிலும் அரசு இழுத்தடித்து வருகின்றது.

தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளும் அரசினால் மறுக்கப்பட்டு தமிழ்மக்களின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்காக உலக நாடுகளினால் தமிழர்களுக்கு வழங்கப்படவுள்ள உதவிகளையும் மறுத்து வரும் இலங்கை அரசு தனது 57வது சுதந்திரதினத்தைக் கொண்டாட தயாராகும் இந்தவேளையில், தன்மானமுள்ள தமிழ்மக்கள் அனைவரையும் அன்றைய தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம். □

# வெளிநாடுகளின் நிதியுதவிகளை தடுப்பது மக்களுக்கு துரோகம் இழைக்கும் செயல்

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீளக்கட்டியெழுப்பும் திட்டங்களுடன இணைந்ததாக வரவு- செலவுத்திட்ட அபிவிருத்தித திடடங்கள் அமுல் செய்யப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளாா.

நேற்று முன்தினம் அரச ஊடகம் ஒனறிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவரது செவ்வியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பாதிக்கப்பட்ட சகல பிரதேசங்களையும் சகல வசதிகளுடன் கூடியதாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சமாதானம் நிலை நாட்டப்படும் வரை இலங்கைக்கு எவ்வித நிதியுதவிகளையும் வழங்க வேணடாம் என சில அரசியல் கட்சிகள் வெளிநாடுகளைக் கேட்டிருக்கின்றன.

இது நாடடு மக்களுச் குதுரோகம் இழைக்கும் செயலாகும். எமது நாட்டில் உள்ள சகல இன மக்களையும் சுனாமி அனர்த்தம் பாதித்துள்ளது.

இதனால் சகல இன மக்களுக்கும் எவ்வித வேறுபாடுகளுமின்றி நிவாரணத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

சர்வதேச நாடுகளின் உதவிகள் சிங்கள மக்களுக்கு மட்டும் தான் கிடைததாக சில அரசியல் கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

ஆனால் அது உண்மையற்ற தவறான குற்றச்சாட்டாகும். அத்துடன் சமாதான நடவடிக்கைகளை மேற்கொணட பின்னர் தான் அரசுக்கு நிதி வழங்க வேண்டும் எனவும் அவர்கள் வெளிநாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் நலன்புரிமுகாமில் அவல வாழக்கை வாழ நாம் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

இவர்களை தமது சொந்த இடங்களில் குடியேற்றி அப் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும். தற்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடற்கரையில் 100 மீற்றர் எல்லைக்குள் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு அனுமதிக்கப்படாது விட்டாலும், பழைய கட்ட



டங்கள் அப்புறப்படுத்தப்படாது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

எனவே சுனாமி அனர்த்தத்தினால பாதிக்கப்பட்ட நாட்டை மீளக் கட்டியெழுப்ப சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.அவ்வாறு நாட்டை மீளக் கட்டியெழுப்பியதும் சமாதான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மேலும குறிப்பிட்டார். (க-60)

# சுகாதார ஊழியர்களுக்கும் 2500 ரூபா கொடுப்பனவு

(கொழும்பு)

கடந்த வரவு - செலவுத்திட்ட அறிக்கையின் மூலம் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவை சுகாதாரத்துறை ஊழியர்களுக்கும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபத்தை சுகாதார அமைச்சின் செயலாளர் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் குறைந்த பட்சம் 2 ஆயிரத்து 500 ரூபா வரை சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

அரச நிர்வாக அமைச்சினால் சம்பள வீதம் தொடர்பான அனுமதி கிடைத்தவுடன், சம்பள நிலுவை காணப்படுமாயின் அதனை வழங்கவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. நவம்பர்,டிசம்பர் மாதங்களில் சுகாதார ஊழியர்களின் நிலுவை மேலதிக கொடுப்பனவுகளின் முறையே பெப்ரவரி, மார்ச் மாத கொடுப்பனவுகளுடன் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் அமைச்சின் அதிகாரிகளுக்கும்,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும், அகில இலங்கை சுபசில்வா சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுததே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (க-9)

## கூட்டம்

புங்குடுதீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை புதிய நிர்வாகத் தெரிவுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை ஊடகப்பேச்சாளர் ப.கனகலிஙகம் தலைமையில் புங்குடுதீவு அரசியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் புங்குடுதீவு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளரும் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், பொது மககள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-126)

## பெல்ஜியத்தில் ரணில்

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் பெல்ஜியம் சென்றடைந்துள்ளனர்.

அங்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் இரண்டு நாட்கள் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபடுவார்கள். இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட, ரணில் விக்கிரமசிங்கவின தனிப்பட்ட செயலாளர் மகேந்திரன ஆகியோர் கலந்து கொள்வார்கள் இந்த சந்திப்புக்களும் நோர்வேயில் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பாகவே இருக்கும் என்றும் இலங்கையின் அரசியல் மாற்றங்களும் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ச)

## விபத்து

(கோண்டாவில்)

இராசவீதியில் கடந்த 31ஆம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் மோட்டார்சைக்கிள் விபத்து ஒன்று இடம்பெற்றது.

இவ்விபத்தில் சிக்கிய வயோதிபமாது காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-130)

## திருத்தம்

செம்மணிச்சந்திக்கண்மையில் கண்டி வீதியில் உள்ள இரு பாரிய குழிகள் அண்மையில் திருத்தம் செய்யப்பட்டது. (ப-47)

## போட்டி

(புங்குடுதீவு)

தவக வலய பண்ணிசைப் போட்டி ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி அருள்மிகு மகாமாரியம்மன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைமுற்பகல் 10.00மணிககு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வே.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக இந்துசமய விவகார அலுவலகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கலந்துகொள்வார்.(ப-126)

## கோரிக்கை

(மருதங்கேணி)

தென்மராட்சி நாவற்குழி வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் மக்கள் எந்த அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருவதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகவே இவ்வீட்டு திட்ட வீடுகளை புனரமைத்துத் தரும்படி அவ்வீட்டுத்திட்ட குடும்பங்கள் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ப-35)

## கண்காட்சி

தென்மராட்சி ஞணி மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களினால் செய்யப்பட்ட கைவினைப்பொருட் கண்காட்சி எதிர்வரும் 7ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ப-29)


# ஜி.ரி. இசற் முன்வருகை

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஆறு பாடசாலைகளின் மீள் கட்டுமானப்பணிகளை மேற்கொள்ள ஜி.ரி. இசற் நிறுவனம் முன்வந்துள்ளது.

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா, வெற்றிலைக்கேணி றோ.க. பாடசாலை, செம்பியன்பற்று றோ.க. த.க.பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை, தாளையடி றோ.க.த.க. பாடசாலை, மணற்காடு றோ.க. த.கலவன் பாடசாலை என்பவற்றையே ஜி.ரி. இசற் நிறுவனம் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளது. (ப-35)

# நேபாளத்தில் மன்னர் தலைமையிலான அமைச்சரவை கடந்த புதன்கிழமை பதவியேற்பு



### *அவசர காலநிலை பிரகடனம்
### *பத்திரிகை தணிக்கை
### *பேச்சுரிமை, கருத்துரிமை மறுப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திரா தலைமையிலான புதிய அமைச்சரவை கடந்த புதன்கிழமை பதவியேற்றது. புதிய அரசு உடனடியாக பத்திரிகைத் தணிக்கையை அறிவித்துள்ளது. நேபாள அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுரிமை, கருத்துரிமை உள்ளிட்ட பிரிவுகளை முடக்கிவைப்பதாக புதிய அரசு அறிவித்துள்ளதுடன் அங்கு அவசர காலநிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தகவல் பெறுவதற்கான உரிமை முடக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு செய்தி சேனல்களின் ஒளிபரப்பு நிறுத்தப்பட்டுள்ளது. அமைதியாகக் கூட்டம் கூடுவதற்கு உரிமை மறுக்கப்பட்டுள்ளது. தனிநபர்களின் அந்தரங்க உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டப்பிரிவும் தடுப்புக்காவலில் வைப்பதை எதிர்க்க மக்களுக்கு உரிமை அளிக்கும் பிரிவும முடக்கப்படுவதாக அரண்மனை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

நேபாள காங்கிரஸ் தலைவர் கிரிஜா பிரசாத், நேபாள ஐககிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாதவகுமாரும் வட்டுக்காவலில் வைககப்பட்டுள்ளதாக அக்கட்சியினர் கூறினர்.

தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் காத்மண்டுவில் அனைத்து செய்தித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. நண்டதூர தொலைபேசி இணைப்புகள், செல்போன் மற்றும் இணையத்தள இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டுள்ளன.

புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக ரமேஷ் பாணடேவை மன்னர் நியமித்துள்ளார். உள்துறை அமைச்சராக தன் பகதூர் ஷாஹியும், மதுக்கர் ஷூம் ஷெர் ராணா நிதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செய்தி மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சராக டாங்கா தாக்காவும், கல்வி மற்றும் ,விளையாட்டு அமைச்சராக ராதா கிருஷ்ணா மைனாலியும் பதவி ஏற்றுள்ளனர்.

அமைச்சரவையில் பத்து உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். ஷெர் பகதூர் தேவ்பா அரசை செவ்வாய்க்கிழமை பதவி நீக்கம் செய்த மன்னர் ஞானேந்திரா, அனைத்து அதிகாரங்களையும் தனது கையில் எடுத்துக்கொண்டார். நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்தார்.

இநநிலையில் பல கட்சி ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துமாறு பிரிட்டன் கோரியுளளது. மன்னரின் நடவடிக்கையால் நேபாளத்தில் நிரந்தர அமைதியோ, அரசியல் ஸ்திரத்தன்மையோ ஏற்படாது எனறு ஐ.நா.சபையின் தலைமைச் செயலர் கொபி அனான் கூறியுள்ளார். (ற)



அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் உள்ள அஸ்பன் பகுதியில் குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் பனிச்சாறுக்குப் போட்டிகளில் பங்கேற்கும் ஸ்வீடன் வீரர் ஜோன் ஒல்சன் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். பயிற்சியின்போது ஒல்சன் அடித்த அசத்தல் 'டைவ்'தான் இது.

# விமான நிலையத்தில் தீ விபத்து



பெங்களூர் விமான நிலையத்தல் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஹோடடல் ஊழியர் ஒருவர் இறந்துள்ளார். இவ் விபத்து காரணமாக மூன்று மணிநேரம் விமான நிலையம் அடைக்கப்பட்டு, விமானப் போககுவரத்து நிறத்திவைக்கப்பட்டது.

பெங்களூர் விமான நிலையத்தல் உள்நாட்டு விமானம் புறப்படும் பகுதயிலுள்ள கட்டடத்தின் முதல மாடியில் கிராண்ட் அசோகா ஹோட்டல் உள்ளது. இந்தக் ஹோட்டல் சமையல் அறையிலுள்ள புகைபோக்கியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 2.15மணியளவில் திடீரெனத் தீப்பிடித்தது.

ஹோட்டலின் மற்ற இடங்களுக்கும் தீ பரவியது. உடனடியாக தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

மூன்று மணிநேர போராட்டத்திற்குப் பிறகு, காலை 5.30 மணியளவில் தீ முழுமையாக அணைக்கப்பட்டது. (ற)

# எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தாய்லாந்தில் பொதுத்தேர்தல்

(பாங்கொக்)

தாய்லாந்தில் எதிர்வரும் 6ஆம் திகதி நடக்கும் பொதுத்தேர்தலில் மககளை கவர்வதற்காக பணம் தண்ணீராகச் செலவழிக்கப்படுகிறது.

தாய்லாந்து பாராளுமன்றத்தில் மொத்தம் 500 இடங்கள் உள்ளன. இந்த இடங்களை நிரப்புவதற்காக எதிர்வரும் 6ஆம் திகதி தேர்தல் நடக்கவுள்ளது.

ஆளும் ராக் தாய் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் கடும் போட்டி நிலவுகிறது. விதவிதமான உத்திகளைக் கையாண்டு மககளின் வாக்குகளைப் பெற இந்தக் கட்சிகள் முயன்று வருகின்றன. 2 ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

விதவிதமான ரீ.வி விளம்பரங்கள், பரிசுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகள் மூலம் பிரசாரம் நடந்துவருகிறது. தேசித் தலைவர்களை விட உள்ளூர் தலைவர்கள் செல்வாக்குப் பெற்றவர்களாக இருப்பதால் அவர்களை பணத்தின் மூலம் சரிக்கட்டி மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு பெரிய தலைவர்கள் முயன்று வருகின்றனர்.

இதுகுறித்து பிரதமா தக்ஷின் ஷினவத்ரா தெரிவிக்கையில்,

மக்களிடம் எங்கள் கட்சிக்கு நல்ல செல்வாக்கு உள்ளது. எருமைகள் தான பணத்தை வீசும் செயலில் ஈடுபட்டுள்ளன என எதிர்க்கட்சிகளைக் கடுமையாக விமர்சித்துள்ளார். (ற)

WORLD NEWS
உலக தரிசனம்

## விஷேட வகை மொபைல் போன்

மொபைல் போனில் பட்டன்களை அழுத்தச் சோம்பல்படுபவர்களுக்கு வசதியாக மேலும் கீழும் ஆட்டினாலும், குலுக்கினாலும் தேவையான சேவையை அளிககும் மொபைல் போன்களை ஜப்பானின் ஷார்ப் நிறுவனம் அடுத்தமாதம் அறிமுகம் செய்யவுள்ளது. இதில் கன்ட்ரோல் சென்சார் தொழில்நுட்பம் இருக்கும்.

# 'சார்க்' உச்சி மாநாடு இரத்து

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தெற்காசிய ஒத்துழைப்பு மாநாடு (சார்க்) இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சுனாமிப் பேரலை தாக்குதலில் இந்தியா, இலங்கை, மாலைதீவில் பெருமசேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்தச் 'சார்க்' மாநாடு பிற்போடப்பட்டிருந்தது. தற்போது நிலைமை சீரானதை அடுத்து எதிர்வரும் 6,7 ஆம் திகதிகளில் மாநாடு நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்வதாக இருந்தார். ஆனால், பிரதமர் மனமோகன்சிங் தனது வங்காளதேச பயணத்தை இரத்துச் செய்துவிட்டார்.

இதுகுறித்து டில்லியில் வெளிநாட்டுச் செயலாளர் ஷியாம் சரண் கூறியதாவது,

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் திடீர் ஆட்சி மாற்றம் எற்பட்டுள்ளது. பிரதமராக இருந்த ஷெர் பகதூர் தேபா ஆட்சியைக் கலைத்துவிடடு மன்னர் ஞானேந்திரா அதிகாரத்தை தனது வசம் எடுத்துக்கொண்டுள்ளார். மேலும், அங்கு நெருக்கடி நிலை பிரகடனப்படுததப்பட்டு வெளிநாட்டு தொடாபுகளும் துண்டிக்கப்பட்டுள்ளது.

அங்கு அரசியல் தலைவர்கள் பலர் சிறையில் உள்ளனர். நேபாளத்தில வசித்த இந்தியர்கள் அவசர அவசரமாக வெளியேறிவருகிறார்கள்.

வங்காள தேசத்தில் இவ் ஆட்சிககு எதிராகக் கலவரம் நடந்துவருகிறது. வனமுறை தலைதூக்கியுள்ளது. முன்னாள் மந்திரி சுப்ரியா படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

எனவே பிரதமரின் வங்காளதேச பயணம் இரத்துச்செய்யப்படுகிறது. இந்தத் தகவலை மாநாட்டு தலைவராக உள்ள பாகிஸ்தான் மறறும் வங்காள தேசததுக்கு தெரிவித்திருக்கிறோம். சார்க் அமைப்பில இந்தியா ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை மறுக்கிறோம். மாநாட்டில் பிரதமர் கலந்துகொள்ளாதது, யாருக்கும் விடுக்கப்படட மிரட்டல் அல்ல இவ்வாறு அதிகாரி கூறினார்.

முன்னதாக பிரதமர் மன்மோகன் சிங், பா.ஜனதா மூத்த தலைவர்களான வாஜ்பாய், அத்வானி ஆகியோரை நேற்று முன்தினம் அழைத்துப் பேசினார். மத்திய மந்திரிசபைக் கூட்டத்துக்குப் பிறகு பிரதமரின் அலுவலகத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர் நிருபர்களிடம் பேசிய அத்வானி, நேபாள நிலைமை தெற்கு ஆசிய நாடுகள் (சார்க்) மாநாடு குறித்து கருத்துக்களை பரிமாறிக்கொண்டதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் வங்காளதேசத்தில் நடககவிருந்த 'சார்க்' உச்சிமாநாடு இரததுச்செய்யப்பட்டதாக பாகிஸ்தான் நேற்று முன்தினம் மாலை அறிவித்தது. இது குறித்து பாகிஸ்தான் செய்தித்துறை மந்திரி ஷேக் ரஷீத்,

7ஆவது சார் உச்சிமாநாடு இரத்துச் செயயப்படுகிறது. புதிய திகதி பினனா அறிவிக்கப்படும் என அறிவிததுள்ளார்.

இதேவேளை, ஜனவரி மாதம் நடைபெறவிருந்த இம்மாநாடு சுனாமி அனர்த்தம் காரணமாக பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



போப் ஆண்டவர் இரண்டாவது ஜான்பால், விரைவில் நலம்பெறவேண்டி, வாடிகனில் உள்ள செயின்ட் பற்றர் சதுக்கத்தில் பிரார்த்தனை செய்கின்றனர் இந்த கன்னியாஸ்திரிகள்.

# தமிழின ஒடுக்குமுறைகள் ஆரம்பித்த நாளே இலங்கையின் சுதந்திரநாள்

(யாழ்ப்பாணம்)

**சுதந்திரதினம் தமிழ் மக்களாகிய எம்மைப் பொறுத்தவரை துக்க தினமாகவே அமையும். தமிழர்களாகிய எம்மைப் பேரினவாதச் சிங்கள அரசாங்கம் நசுக்குவதற்கு அரம்பித்த நாள்தான் இலங்கையின் சுதந்திரதினமாக அமைந்திருக்கின்றது. 1948ஆம் ஆண்டு பிரித்தானியாவிடம் சுதந்திரத்தினைப் பெற்ற இலங்கைத் தீவில் சிறுபான்மை இனம் என்ற முத்திரை குத்தப்பட்டு, வந்தேறு குடிகள் என்ற வாசகம் பொறிக்கப்பட்டு, மொழிரீதியாகவும், இன ரீதியாகவும் பல்வேறுபட்ட வகையில் தமிழர்களைப் புறக்கணிப்பதில் சிங்கள ஆட்சி பீடத்தில் ஏறிய பேரினவாதச் சக்திகள் முனைப்புப் பெற்று செயற்பட்டனர். இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

நில ஆக்கிரமிப்புக்களைச் செய்து, மொழி உரிமையைப் பறித்து தனிச சிங்களச் சட்டம் என்கிற இன அழிப்பு வேலைக்கு அடித்தளங்கள் போட்டு, எமது தமிழ் மக்களை அடக்குமுறைச் சகதிக்குள் தள்ளினார்கள்.

இவ்வாறான அடக்குமுறைகளுக்கு தமிழர்களை இட்டுச் சென்ற நாளே சுதந்திரதினமாகும்.

இந்த நாள் சிங்களவர்களுக்கு மட்டுமே சுதந்திரதினமாகும். தமிழர்கள் இன்றும் சுதந்திரம் பெறவில்லை. தமிழர்களுக்கு என்ற தனித்துவம் இன்னும் அமையப்படவில்லை. தொடர்ந்து வந்த இனவாதப் போக்குடைய சிங்கள அரச தலைவர்கள் மேலும் மேலும் தமிழர்களை ஓரம்கட்டவே எத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அடிப்படையில் இந்த சுதந்திரதினத்தை தமிழர்களாகிய நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. எமக்கென்று தனித்துவமான. சுய நிர்ணய உரிமையுடன் கூடிய இந்த இலங்கைத் திருநாட்டில் தமிழர்களாகிய நாம் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் எப்போது வாழுகின்றோமோ அப்போதுதான் எமக்கு சுதந்திரதினமாகும்.

ஒரேநாட்டிற்குள் ஒரு இனத்தினை அழிப்பு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு அந்த இனத்தின் அபிலாசைகளை ஏற்க மறுத்துக்கொணடு, உலக நாடுகளுக்கு மாயத்தோற்றத்தினைக் காட்டிக்கொள்வ்திலே இலங்கை அரசாங்கம் செயற்பட்டுக கொண்டிருக்கின்றது.

ஆனால் இன்றும் சொந்த வீடுகள் இருந்தும் சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாமல் அகதிமுகாம்களில் அவல வாழ்க்கையையே தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இராணுவ ஆக்கிரமிப்பில் நிலத்தினை இழந்து, உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, தமிழர் தாயகப் பகுதிகளில் இலங்கை, அரசு, பல்வேறுபட்ட அடக்குமுறைகளையே மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை இராணுவம் சொந்த நிலத்தில், சொந்தக் கடலில் சுதந்திரமாக தொழில் செய்யமுடியாமல் தமிழர்கள் தடுத்தும், பல்வேறு தடைகளை ஏற்படுத்தியும் உள்ளது. இந்த நிலையில், ஒரு பக்கம் சுதந்திரம் என்ற தொனிப்பும், மறுபக்கம் அடக்குமுறை என்ற இனஅழிப்பு நடவடிக்கையும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருவதனை வெளிப்படையாக உணரலாம்.

இயற்கையின் அனர்த்தத்தினால் தெற்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளையும் கட்டிக் கொடுத்து, சொந்த இடத்தில் அவர்களை குடியமர்த்தவேண்டும் என்று உலக நாடுகளிடம் உதவிப் பிச்சைக்குக் கையேந்தும் இன்றைய அரசாங்கம், பல ஆண்டுகளாக சொந்த வீடுகளை உயர் பாதுகாப்பு வலயம் என்ற இராணுவ ஆக்கிரமிப்புக்குள் பறிகொடுத்த தமிழ் மக்களை அவர்களுடைய சொந்த வீடுகளுக்கு அனுப்பவேணடும் என்ற எண்ணப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு ஏன் ஏற்படவில்லை? இதுவே இனரீதியான பாகுபாட்டினை, இனரீதியான அடக்கு முறையினை வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது. எனவே தமிழர்களை அடக்குவதற்கு கால்கோளாக ஆரம்ப நாளாக இருந்த சுதந்திர தினத்தினைக் கரிநாளாக, தமிழர்களை இருண்டவாழ்வை நோக்கி நகர்த்திய நாளாகவே நாம் கருதுகிறோம்.

எனவே தமிழர்களை அடக்குவதற்கு அடித்தளமாக ஆரம்ப நாளாக இருந்த சுதந்திரதினத்தினை கரிநாளாக தமிழர்களை இருண்ட வாழ்வை நோக்கி நகர்த்திய நாளாகவே நாம் கருதுகின்றோம்.

## ஆண்டறிக்கை அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவர் சனசமூக நிலையம், 2003 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் கடந்த தை மாதம் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், வேலைத்திட்டங்களை உள்ளடக்கிய ஆண்டறிக்கையை யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளா கலாநிதி க.குணராசாவிற்கு அனுப்பி வைத்துள்ளது. (ற)

# போராடாமலே சுதந்திரத்தை பெற்றுக்கொண்டதினால் சிங்களவர்களுக்கு சுதந்திரத்தின் மகத்துவம் புரியவில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் சாட்டை

(கொழும்பு)

**பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகள் தமக்கான சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான போராட்டங்களை நடாத்தி அதன் விளைவாக சுதந்திரத்தினை பெற்றுக்கொண்டன. அந்த வகையில் சுதந்திரத்திற்கான போராட்டத்தை நடாத்திய இந்திய அரசுக்கு சுதந்திரம் கிடைத்தவேளை அயலில் இருந்த நாடான இலங்கையும் போராடாமலே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது.**

**போராடாமலேயே சுதந்திரம்பெற்ற இலங்கைக்கு சுதந்திரத்தின் மகத்துவம் புரியாமை உண்மையானதே. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சுதந்திரதினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

ஒரு நாடு சுதந்திரம் அடைந்துள்ளது எனின் அந்த நாட்டில் வாழும் சகல மக்களும் மனித உரிமைகள் அனைத்தையும் அனுபவித்து வாழக்கூடிய நிலை காணப்படல் வேண்டும்.

ஆனால் இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களாகிய நாம், நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்று வரையும் சுதந்திரத்தை அனுபவிக்கமுடியாதவர்களாகவும், உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும், பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்களாகவுமே காணப்படுகின்றோம்.

இந்நிலையிலேயே எமது பூர்வீக நிலப்பரப்பான தமிழர் தாயக மக்கள் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு உணர்வுடன் எழுந்தனர். சாத்வீகப் போராட்டத்திற்கு அரசு மதிப்பளிக்காத நிலையில் தொடர்ந்து வன்முறை எம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டவேளையில்தான் தமிழர்களும் போராட ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆயுதம் ஏந்திப் போராடி சுதந்திரத்தையும், உரிமைகளையும் வென்று கொள்ள முனைந்தமை வரலாற்றுக் கடமையே.

மாறிமாறி இலங்கையை ஆண்ட பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் தமது ஆட்சிக்காலத்தில் பல்வேறு ஒடுக்குமுறைகளை எம்மீது திணித்தனர். எமது உரிமைகளைப் பறித்தனர். எமது தாயக நிலப்பரப்பை அபகரித்தனர். இவை அனைத்தையும் மீட்டுக்கொள்வதற்கே ஆயுதப்போராட்டம் தொடர்ந்தது.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளும், அவர்களை சிறந்த முறையில் வழிநடத்திய எமது தேசியத்தலைவரும் எமது தாயக விடுதலைக்காகவும், தமிழ் தேசிய வளர்ச்சிக்காகவும், எமது மக்களின சுதந்திர வாழ்வுக்காகவும் இராணுவத்துடன் போராடி எமது தாயக நிலப்பரப்பின் 70%மான நிலப்பரப்பினை தமிழர் நிர்வாக கட்டுப்பாட்டுக் கொண்டுவந்துள்ளமை உலகம் நன்கறியும்.

மீதியான 30 வீத நிலப்பரப்பையும் ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை எமது நிலத்தை விட்டு வெளியேற்றி தமிழர் தாயகம் எங்னும் ஆட்சி அதிகாரத்தை உருவாக்கும் காலம் உருவாகும் வேளையை நாம் எல்லோரும் எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

இலங்கை சுதந்திரம்பெற்ற காலத்தில் இருந்து இன்றுவரை எமது சுதந்திரத்திற்காக போராடியதன் விளைவால் 17 ஆயிரத்து 800 மேற்பட்ட போராளிகள் மாவீரர்களாகவும், இலட்சக்கணக்கான மக்களை இழந்தும் பலகோடி சொத்துக்களை இழந்தும் எமது சுதந்திரம் பெறப்படவில்லை.

இநநிலையில் இலங்கையில் வாழும் தமிழ்பேசும் இனம் ஆயுத பலத்தாலும், அரசியல் பலத்தாலும் உயர்ந்துள்ளமையை போராட்ட வெற்றிகளாலும், ஜனநாயக தேர்தல் மூலம் தமிழ்பேசும் மக்கள் வழங்கிய வாக்குறுதிகளினூடாகவும் பேரினவாத அரசியல்வாதிகளும் ஏன் சர்வதேச சமூகமும் உணர்ந்துள்ளபோதும் எமது சுதந்திரத்திற்காக தொடர்ந்தும் நாம் போராட வேண்டிய நிலை உள்ளமை வருத்தத்திற்குரியது.

சுதந்திரத்தை வென்றெடுக்கும் காலம் எம்மை நெருங்கி வந்த போதிலும் சுனாமியின் பேரலைத் தாக்கம் எமது சுதந்திரப் போராட்டத்தில் மேலும் ஓர் பின்னடைவைத் தந்துள்ளது. இதன்மூலம் தாயக நிலப்பரப்பில் 40,000 உயிர்களை பிரிந்தோம். கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்தோம். உளவியல் ரீதியான பாதிப்புக்களைச் சுமந்துள்ளோம். எமது சொந்தக்காலில் நின்று தொடர்வோம்.

சுனாமியின் தாக்கத்தால் எமது தாயக நிலப்பரப்பெங்கும் சோகமாக இருந்த வேளையில் பாதிக்கப்படாத எமது உறவுகளும், உலக தொண்டர் நிறுவனங்களும், உள்ளூர் தொண்டர் நிறுவனங்களும் ஆற்றிய பணிகளை அள்விட முடியாது.

இவற்றை ஒழுங்கமைத்து எமது மக்களை பாதுகாக்க எமது தேசியத் தலைமையும், தமிழீழ விடுதலைப்புலிகளின் சகல பிரிவுகளும் ஆற்றிய பணிகளை உலக நாடுகள் வியந்து போற்றுகின்றன.

அரசோ சர்வதேச உதவிகளைக் குவித்துவைத்துக்கொண்டு தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களை புறக்கணித்து உதவிகளை வழங்காதநிலையில் ஆட்சியளார்கள் சர்வதேச நிதியை பயன்படுத்தி இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்து இராணுவ பலத்தை அதிகரிக்கவும், அரசியல் செல்வாக்கினை பெருக்கிக் கொள்ளவும் எடுக்கும் முயற்சிகள் எம்மீது மீண்டும் இராணுவ நெருக்கடிகளை பிரயோகிக்க முயல்வதாகவே கருதவேண்டியுள்ளது.

சுனாமியின் உதவிகள், புறக்கணித்த நிலையிலும், இருக்க இடமின்றி அல்லல்படும் எமது மக்களின் நிலங்களை உயர் பாதுகாப்பு வலயம் எனும் போர்வையில் அபகரித்துள்ள இராணுவத்தை அங்கிருந்து விலக்காத அரசு, சுனாமியின் தாக்கத்தால் தமது இல்லிடங்களை விட்டு இடம் பெயர்ந்து மக்கள் நலன்புரிமுகாம்களில் வாழ தமது முகாம்களை அவ்விடத்தில் விஸ்தரிக்கும் அரச படையினரின் அடாவடித்தத்தை கண்டிக்கிறோம்.

தமிழ் பேசும் மக்கள் நெருக்கமான சூழலில் நிலமின்றி சுகாதார வசதிகள் இன்றி, வாழ வீடின்றி உளவியல் தாக்கத்துடன் வாழும் இவ்வேளையில் அரசு சுதந்திர தினம் கொண்டாடுகிறது. இது எமக்கான சுதந்திரம் அல்ல. இது பேரினவாதிகளின் சுதந்திரமே.

எமது தாயகமீட்பு முற்றுப் பெற்று எமது உரிமைகள் அனைதும்பெற்று, ஓர் இறைமைமிக்க இனமாக வாழும் சூழல் ஏற்பட்டு, எமக்கான நிர்வாக கட்டமைப்புக்கள் செயல்பட்டு எமது தரையிலும் கடலிலும் சுதந்திரமாக உலாவுகின்றநாளே எமது சுதந்திரதினமாகும்.

அதுவரையும் இலங்கையில் கொண்டாடப்படும் சுதந்திரதினம் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட அநீதிகள் எம் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட நிகழ்வுகளின் ஆரம்பநாளாகவே நாம் பார்க்கின்றோம்.

ஆகையால் 04.02.2005 அன்றைய தினம் தமிழ்பேசும் மக்கள் வாழ்வில் இருள்சூழத் தொடங்கிய நாளாக தாயக மக்கள் அனைவரும் கருதி அந்த துக்க நாளினை நினைவில் கொள்வோம் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரியப்படுத்துகின்றோம் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை - குறள்

வலம்புரி

# சுதந்திரத்தை அனைவரும் கொண்டாடுவது எப்போது?

இலங்கையின் 57 வது சுதந்திர தினம் இன்றாகும். ஒரு நாடு சுதந்திரமடைந்ததெனில் அந்த நாட்டில் வாழும் சகல இன மக்களும் அந்த சுதந்திரத்தை மகிழ்வோடு அனுஷ்டிக்க வேண்டும். அதுவே சுதந்திர தினத்தின் அர்த்த புஷ்டியான வெளிப்பாடாகும்.

ஆனால் இலங்கையின் சுதந்திரம் என்பது ஒரு குறித்த இன குழுமத்திற்கு மட்டுமே உரியதாகிவிட்டது.

பெரும்பான்மை இனம் என்பதற்காக ஒரு நாட்டின் சுதந்திரம் - இறைமை - ஆட்சி இவை எல்லாம் அந்த இனத்திற்கே உரியது எனக் கருதுவது உண்மையான சுதந்திரத்தை குறித்து நிற்காது. மாறாக பெரும்பான்மையினரின் அத்தகையதொரு மனோநிலை பெற்ற சுதந்திரத்திற்கு ஆபத்தைத் தருவதாகவே அமையும்.

இதுவே இலங்கைத் தீவில் நடந்துகொண்டிருக்கின்றது. பெரும்பான்மை இனமான சிங்களவர்கள் பல்லின மக்கள் வாழும் இல்ங்கைத் திருநாடு தமக்கே உரித்துடையது எனக் கருதிக் கொள்கின்றனர்.

இதனால் இனங்களுக்கிடையே ஒற்றுமையில்லை. சமத்துவம் இல்லை. 1948 களில் இலங்கை சுதந்திரமடைந்தது எனக் கூறப்பட்ட போதிலும் அது ஒரு வாய்ப் பேச்சாக உள்ளதே தவிர, இலங்கைப் பிரஜைகள் அனைவரும் அச் சுதந்திரத்தை மனதால் ஏற்று அனுஷ்டித்ததாக இல்லை.

இந் நிலை கடந்த 57 வருடங்களாக நீடிக்கின்றது. இலங்கைத் திருநாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் இலங்கையின் சுதந்திர தினத்தை ஏன் கொண்டாடவில்லை என்ற கேள்வி சிங்கள ஆட்சியாளர்களிடம் ஏற்பட்டிருக்குமாக இருந்தால்- அத்தகையதொரு கேள்விக்கு உரிய பரிகாரம் தேடப்பட்டிருந்தால், பாரதத்தின் சுதந்திரத்தை அங்கு வாழும் பல்லின மக்கள் எவ்வாறு ஒற்றுமையாக, ஒருமுகப்பட்டு கொண்டாடுகிறார்களோ அதே போன்று இலங்கை மக்களும் தங்கள் திருநாட்டின் சுதந்திரத்தை ஒற்றுமையாக அனுஷ்டித்திருப்பார்கள்.

ஆனால், சிங்கள பெரும்பான்மை இனம் அத்தகையதொரு சமத்துவ நிலையை ஏற்படுத்தவும் இல்லை. ஏற்படுத்த விரும்பவும் இல்லை. இதனால் தென்னிலங்கையில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டபோது சிங்களப் பேரினவாதத்தால் நசுக்கப்பட்ட தமிழினத்தின் இதயங்கள் வேகமாகத் துடித்தன.

சிங்கள இனத்தின் விலங்கை உடைத்தெறிய வேண்டும் என அவர்கள் சபதம் எடுத்தனர். அதன் விளைவாகவே சுமார் 20 வருடங்களாக இன யுத்தம் நடந்தது.

தமிழ் மக்களும் சுதந்திர தினத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்ற சிந்தனையே இல்லாத சிங்கள ஆட்சியாளர்கள் சுதந்திர தினத்தையே கொண்டாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். இந் நிலைமை தற்போது சற்றுத் தணிந்திருந்தாலும் இத் தணிவு எதனால் ஏற்பட்டது. இதனை முழுமைப்படுத்த வேண்டுமானால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து ஒரு திடமான முடிபை ஆட்சியாளர்கள் எடுக்கவில்லை.

இதனால் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் இன்றைய சுதந்திர தினம் கறுப்பு தினமாக - துக்க தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. ஒரு நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும் கூடி இது எங்கள் நாடு - எமது தேசம் என்று கொட்டி முழங்கி சுதந்திரத்தை என்று கொண்டாடுகின்றார்களோ அன்று தான் சுதந்திரம் மலரும். இந் நிலைமை இலங்கைக்கு சாலவும் பொருத்துடையதாகும்.

ஆக, தமிழ்மக்கள் இலங்கையின் சுதந்திர தினத்தை என்று கொண்டாடுகின்றார்களோ அன்று தான் இலங்கைக்கு சுதந்திரம் - அங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம்.

# இலங்கையை மீளக் கட்டியெழுப்ப 1.5 பில்லியன் அமெ. டொலர் தேவை

## நிதி நிறுவனங்கள் கூட்டறிக்கை

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் சேதமடைந்த இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் தேவை என உலகவங்கி, சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன விடுத்துள்ள கூட்டுஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று வங்கிகளும் இவ்வறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டன. ஆழிப்பேரலையினால் இலங்கைகது ஏற்பட்ட இழப்புகளின் பெறுமதி 1 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இது உள்நாட்டு மொத்த வருமானத்தில் 4.4 வீதமாகும். இதனை நிவர்த்தி செய்ய குறுகிய கால தேவைகளுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது. சுற்றாடல், விவசாயம், சுற்றுலா தவிர்ந்த ஏனையதுறைகளை புனரமைப்பதற்கு இந்த நிதியில் வடக்கிற்கு 19 வீதம், கிழக்கிற்கு 45 வீதம் தெற்கிற்கு 29.5 வீதம் மேற்கிற்கு 10.1 வீதம் தேவை.

சுகாத்தாரம், கல்வி, தொடரூந்து போன்ற ஏனைய துறைகளைப் புனரமைப்பதற்கு வடக்கிற்கு 17.2 வீதம், கிழக்கிற்கு 41.1 வீதம், தெற்கிற்கு 29.1 வீதம் மேற்கிற்கு 12.6 வீதம் தேவைப்படுகின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கைககான உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், ஆழிப் பேரலையினால இலங்கை மக்கள் பாரிய அளவில் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். தற்போது நாட்டை மீளக்கட்டியெழுப்ப வேண்டியது இலங்கை எதிர்நோக்குகின்ற பாரிய சவாலாகும். இழப்புகளை ஈடு செய்ய வேண்டுமென்றால் இனங்களிடையே ஒற்றுமை தேவை. சமாதானத்திற்கான பாலத்தை அவர்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என்றார். (ற-8)

# ‘சுனாமி’ அனர்த்தத்தை இலங்கை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளது

## சர்வதேசத் தலைவர்கள் பாராட்டியதாக ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினை இலங்கை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளதாகவும் பொருத்தமான நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளதுடன் ஏனைய நாடுகளை விட இலங்கை சிறப்பாகச் செயற்பட்டுள்ளதாகவும் சர்வதேசத் தலைவர்கள் பலர் பாராட்டுத் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

’தேசிய அனர்த்த முகாமைத்துவ விருது வழங்கும் விழாவிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அனர்த்தம் இடம்பெற்று 5நாட்களினுள்ளேயே நாட்டைப் பழைய நிலைமைக்குக் கொண்டு வர முடிந்துள்ளது. பணக்காரர், ஏழை வித்தியாசம் பாராமல் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டதனாலேயே இது முடிந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். மேற்படி முகாமைத்துவ கற்கைநெறி கிராமிய மனிதவள அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டது. முதற் கட்டமாக ஆயிரத்து 250 பேர் தங்களது பயிற்சியை முடித்துக்கொண்டுள்ளனர்.இதனை அமைத்தவரான சி.பி. ரத்னாயக்கவிற்கு ஜனாதிபதி அச் சந்தர்ப்பத்தில நன்றி தெரிவித்தார்.

முன்னர் இலங்கை இயற்கை அனர்த்த வலயத்தில் இருநதிருக்கவில்லை. சுனாமியை தொடர்ந்து இலங்கையும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கு மேற்படி அமைப்பு பேருதவியாக அமையும் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, அனர்த்தம் இடம்பெற்ற அன்றைய தினமே யாழ்ப்பாணம் போன்ற தூர இடங்களுக்கு உணவுப் பொருடகளை எடுத்துச்செல்லக் கூடியதாக இருந்தது என்றும தொற்றுவியாதிகள் எதுவும் ஏற்படாமல் அரசாங்கம் தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்தது எனவும் கூறினார். (ற-6)

# ஜே.வி.பி வெளியேறும் பட்சத்தில் அரசுக்கு ஆதரவளிக்கத் தயார்

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. வெளியேறினால் அரசுக்கு தாம் ஆதரவளிக்க தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரம சிங்கவின் அலுவலகததில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளாமாநாட்டில் பேசிய ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 15அம்சத திட்டங்களை அரசு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் ,ஜே.வி. பி அரசிலிருந்து வில்கினால் தாம ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. •

அரசாங்கத்திற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் இவ் ஆதரவானது அமைச்சுப் பதவிகளை நோக்கமாகக் கொண்டதல்ல என்றும் இது நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு தமது கட்சி வழங்கும் பங்களிப்பாகும் என்றும் அவர் அங்கு குறிபபிட்டார்.

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. ஒருபோதும் விலகப் போவதில்லை. ஜே.வி.பியினருக்கு தற்போது அதிகாரம் தேவை எனவே அரசிலிருந்தும் அதிகாரத்திலிருந்தும் அவர்கள் ஒருபோதும் விலகமாட்டார்கள். அரசாங்கத்தை மிரட்டி பணிய வைககும் நடவடிக்கைகளிலேயே அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள் என்று ராஜித சுட்டிக்காட்டினார். (ச)

# இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவையில் உள்ளீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத் திணைக்களங்களில் கடமையாற்றும் இணைந்த சேவையைச் சேர்ந்த பொது எழுதுநர் சேவை, அரச தட்டெழுத்தாளர் சேவை, அரச சுருக்கெழுத்தாளர் சேவை, கணக்குப் பதிவுனர் சேவை, சிறாப்பர் சேவை,

களஞ்சியக் காப்பாளர் சேவை ஆகிய பதவிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை அரசாங்க முகாமைத்துவ உதவிச் சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதற்கான சுற்றறிக்கை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் சகல அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள, பிரதேச செயலாளர்கள், அரச நிறுவனத் தலைவர்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வுத்தியோகத்தர்கள் தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் அரசாங்க முகாமைத்துவ உதவிச் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்க முகாமைத்துவ உதவிச் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யவிரும்பும் உத்தியோகத்தர்கள் பங்குனி 23 ஆம் திகதிக்கு முன்பாக திணைக்களத் தலைவரூடாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-47)

## திசைரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

முழுநிலவின் பிம்பம் ஏரியில் விழுகிறது. ஆனால் மேற்பரப்பு கொந்தளிப்பாக இருப்பதால் அந்தப் பிம்பத்தை நாம் தெளிவாகக் காணமுடிவதில்லை. கொந்தளிப்பு அடங்கட்டும். இயற்கை அலை எழும்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அமைதியாக இருங்கள் . சிறிதுநேரம் சென்றால் இயற்கையே உங்களை விட்டுவிடும். நாம் யார் என்பது அப்போது நமக்குத் தெரியவரும்.

சுவாமி விவேகானந்தர்

## நெத. வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியுடன் பேச்சு

நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் பேணாட்போல் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். ஆழிப்பேரலைகளினால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாகவும், இலங்கையின் அரசின் எதிர்கால அரசியல் திட்டம் குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது. (ச-8)

## சந்தேக நபர்கள் வாக்குமூலமளிப்பு

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவையும், அவரின் மெய்ப் பாதுகாவலரையும் சுட்டுக் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட ஐந்து சந்தேகநபர்களும் நேற்று கொழும்பு பிரதான மஜிஸ்ரேட் முன்னிலையில் விசேட வாக்குமூலம் ஒன்றை அளித்துள்ளனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (த-8)

# இராணுவ ஆக்கிரமிப்பு நீள்கையில் சுதந்திர தினம் வெறும் ஏமாற்று

## தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் ஆயுதபலமும், அரசியல் பலமும் அரசின் அடித்தளம் முழுவதையும் ஈடாடச் செய்துள்ள நிலையில் சமாதானம், பேச்சுவார்த்தை என்ற இருவகை வர்ணத்தைப் பூசியவாறு வலம் வருகின்றது அரசு. இன்று அந்த சமாதானத்தில் சுதந்திரதினம் 57 ஆவதாக உயர்கின்றது. இன்றும் எமது மக்களின் பூர்வீகக் குடியிருப்புப் பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ளன.


இதனால் எமது மக்களுடைய வாழ்க்கையில் அகதிமுகாம்களின் அவலங்களே தொடர்கதையாக நீள்கின்றது என தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிமுகாம்களின் வாழ்வியலுக்கான அடிப்படை வசதிகளின்றி தொற்றுநோய்களோடு தொடர்ந்து போராடும் அவலங்கள் தான் ஏராளம். பூர்வீக நிலம் இருந்தும் அகதிகளாய் இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து வாழும்நிலை இன்றும் எமது மண்ணில் சுடுகுழல் நீட்டி சுதந்திரத்தை அபகரிக்கும் பணியில் இராணுவம் சந்திக்குச் சந்தி மண்ணணைகள், முள்ளுக்கம்பியின் முற்றுகைகள், சோதனை நிலையங்கள், வேதனைதரும் அவர்களின் வெறித்தனப் பார்வைகள், திட்டமிட்டுச் செய்யும் கொலைகள் இவற்றுக்கு நடுவில்தான் எமது மக்களின் வாழ்வியல் நடந்துகொண்டிருக்கிறது.

வெள்ளைச் சீருடைக்குத் தரும் அந்தஸ்தோ, மாணவர்களுக்குரிய சுதந்திரமோ வழங்கப்படாமல் இலங்கை அரசு திட்டமிட்டு ஒடுக்கிக்கொண்டுள்ளது. பள்ளிகளைச் சூழ்ந்து முள்வேலிகளும், மாணவர் மீது இராணுவம் காட்டிக்கொண்டிருக்கும் அடக்குமுறைகளும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

இந்த வேளையில் இலங்கை அரசு சுதந்திரதினம் என்று கூறிக்கொண்டிருப்பது ஏமாற்றுச்செயலாகுமென அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# 5 சைக்கிள், ஒரு எம்.டி 90 நகரில் பொலிஸாரால் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதியில் காணாமல்போன 4 சைக்கிள்களையும், ஒரு மோட்டார் சைக்கிளையும் யாழ். பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

யாழ். நகரை அண்டிய பிரதேசங்களிலேயே அவை மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சைக்கிள்களில் 68227871, 68227014, 941470 ஆகிய மூன்று சைக்கிள்களும், ஒரு எம்.டி 90 மோட்டார் சைக்கிளும் (NPGH 6403) யாழ். பொலிஸ் நிலையத்தில் அடையாளம் காணும்பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் சிலர் சைக்கிள்களை மாறி எடுத்துச்செல்வதாலும் சைக்கிள்கள் காணாமல்போவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச)

# பாதிக்கப்பட்ட 15 மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு

## மேலும் ஆயிரம் பேருக்கு வழங்க நடவடிக்கை



படம் துன்னாலை நிருபர்

(துன்னாலை)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்றுப் பருத்தித்துறையில் நடைபெற்றது. இதன் முதற்கட்டமாக 15 மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மீன்பிடிப்படகுகளும், அதற்கான 9.9 குதிரை வலுவுடைய எஞ்சினும், 9 வலைகளும் மழைஅங்கிகள், சைக்கிள்கள் என்பன 15 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

கியூமெடிக்காவின் இலங்கைக்கான பணிப்பாளர் வண. சாம்.இராஜசூரியர் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், என்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, முனை தொம்மை அப்பர் ஆலயப் பங்குத் தந்தை பெயஸ் இருதயதாஸ், கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன், கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இவ்வுதவி யாழ். மாவட்டத்தில் ஆயிரம் பேருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் கியூமெடிக்கா நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச-101,43,08)

# மோட்டார் சைக்கிளில் மூவர் பயணம் செய்வதை தவிருங்கள்

## தமிழீழ காவல்துறை அறிவுறுத்து

மோட்டார் சைக்கிளில் மூவர் பயணம் செய்வதையோ, சிறுவர்களை எண்ணெய்த் தாங்கியில் ஏற்றிச் செல்வதையோ தவிர்த்துக்கொள்ளும்படி தமிழீழ காவல்துறையினர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி. சிவகுமாரன் விடுத்துள்ள வேண்டுகோளில் மேற்கண்ட விதிமுறைகள் தொடர்பாக ஏற்கனவே எம்மால் அறிவுறுத்தப்பட்டும், சிலர் இதனால் ஏற்படும் விபரீதங்களை அறியாது பயணிப்பதை அவதானிக்கமுடிகிறது.

3 பேர் பயணிக்கும்போது விபத்து ஒன்று நடைபெறுமாயின் அவ்விபத்தில் மூன்றுபேரும் இறக்கநேரிடும். அல்லது காயப்படநேரிடும். எனவே இவற்றைக் கவனத்தில் எடுத்து மோட்டார் சைக்கிளை ஓட்டுமாறு ஓட்டுநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். (ச)

## பாகிஸ்தானுடன் பாதுகாப்பு...

இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை முஸ்தீபுக்கு பல்வேறு தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து சீனாவுடன் அண்மையில் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டார்.

இராணுவ ரீதியான தயார்படுத்தல்களின் ஒரு அங்கமாக தற்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளவுள்ளார். இராணுவ ரீதியான உதவிகளை வாரி வழங்கிவரும் நாடுகளில் முக்கியமானது பாகிஸ்தான் என்பதுடன், தொடர்ந்தும் அது இராணுவ ரீதியான் உதவிகளை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. சுமார் இரண்டு கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களைக் கடனுக்கு வழங்க தயாரென பாகிஸ்தான் அண்மையில் இலங்கைக்கு வழங்கிய சலுகை குறித்து அரசு தரப்பு ஆலோசனை நடத்திவருகிறது. இது குறித்தும் ஜனாதிபதி பாகிஸ்தான் அரசுத் தரப்புக்களுடன் பேசுவார் எனத் தெரியவருகிறது. ஏதிர்வரும் 9 ஆம் திகதி பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மற்றும் உயர்மட்ட அரசுத் தலைவர்களையும் ஜனாதிபதி சந்திரிகா சந்திப்பார். அங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, வாணிப உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு மற்றும் விவசாயம் ஆகியவை தொடர்பாக இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் எனவும் தெரியவருகிறது.

ஜனாதிபதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டதன் பின்னர் ஆயுதக் கொள்வனவுக்கு இராணுவ உயர்மட்டக்குழு அங்கு சென்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

## சி-130கே ரக...

இதற்கான உதிரிப்பாகங்களையும் விரைவில் அனுப்பிவைக்குமாறு விமானப்படை வட்டாரங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை சி-130கே ரக விமானங்கள் இரண்டு உதிரிப்பாகங்கள் இன்றி முடங்கிக்கிடப்பதாக விமானப்படைத் தளபதி ரொனால்ட் பெரேராவை மேற்கோள் காட்டி அமெரிக்கப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## அரச...

திறந்து வைக்கப்படும்.

இன்று தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நிவாரண வேலைகளில் சகல உத்தியோகஸ்தர்களும் ஈடுபடவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவுடன் பணமாக மேலதிக படிகளும் இந்த உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் என்று பொதுநிர்வாக அமைச்சு சுற்றுநிருபம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பலியான ஒவ்வொருவரின் சார்பிலும் அடுத்த திங்கட்கிழமைக்குள் 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி அத்தியாவசிய தேவைகள் பிரதம ஆணையாளருக்குப் பணித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபாவும் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்காக 2500 ரூபாவும், 375 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பங்கீட்டு அட்டைகளும் திங்கட்கிழமைக்குள் வழங்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி பணித்துள்ளார். (த)

## அகவை...

வடக்கு-கிழக்கு மனிதஉரிமைகள் செயலகப்பணிப்பாளர் வணபிதா கருணாரட்ணம் அடிகளாரிடம் மேற்படி 23 சிறுவர்களையும் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக கையளிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் இயங்குகின்ற அரசியல்துறையினரின் விசேடகுழுவினரால் இனங்காணப்பட்ட அகவை குறைந்த சிறுவர்களே நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 19 சிறுவர்களும் மனித உரிமைகள் செயலகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களது பெற்றோர் இனங்காணப்பட்டு அவர்களிடம் பிள்ளைகள் ஒப்படைக்கப்படவிருக்கின்றனர். (த)

## கட்சிகளின்...

வேண்டும் என்ற நோக்கம் அரசாங்கத்திடம் இல்லை. அவ்வாறான நோக்கம் இருக்குமானால் இந்த செயல்திட்டத்துக்கு பாராளுமன்றமே முழு ஒத்துழைப்பை வழங்கும். இதன்மூலம் தற்போது எமக்கு கிடைக்கும் நிதியைவிட பெருமளவான நிதி கிடைக்கும்.

பாராளுமன்றத்தில் அனைத்து கட்சிகளின் கண்காணிப்பின் கீழ் இந்த செயற்திட்டம் மேற்கொள்ளப்படுமாயின் இந்த நிதியினை ஒழுங்கான முறையில் செயல்மிக்கதாக பயன்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-8)


# உடன் தேவை

☆ ஓவ்செற் இயக்குநர்கள்

☆ ஓவ்செற் - பயிலுநர்கள்

(யாழ் நகரமையத்திலிருந்து 8கி.மீ. தூரத்திற்குள் நிரந்தரவசிப்பிடத்தைக் கொண்ட ஆண்கள்.)

11-02-2005 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வருகை தரவும்

ஆளணி முகாமையாளர், வலம்புரி


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.